பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

Job! With High Salary
Follow (C/720)
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 28 புதன்கிழமை (11.05.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 224

# இலங்கைக்கு ஐ.நா.வின் புதிய பிரதிநிதி
# இராஜதந்திர உறவை சீராக்கும் முயற்சி




(கொழும்பு)

இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளைச் சீரமைப்பதற்கு ஐக்கியநாடுகள் சபை தயாராகிவருகிறது.

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை வெளியானதன் பின்னர் இலங்கை அரசுக்கும் ஐ.நா.வுக்குமிடையில் இராஜதந்திர ரீதியான உறவுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இச்சூழ்நிலையை கனகச்சிதமாக கையாள்வதற்கும், சுமுக நிலையைத் தோற்றுவிப்பதற்கும் ஐ.நா. தற்போது முன்முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. இதன் முதற்கட்டமாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளராகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிரந்தர பிரதிநிதியாகவும் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்பாளராகவும் சுபேனி நந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழி அறிவு இன ஐக்கியம் தரும்
### அமைச்சர் வாசுதேவா



(யாழ்ப்பாணம்)

இங்குள்ள இருசாராருக்கும் இரண்டு மொழிகளும் தெரிந்திருந்தால் மொழி தொடர்பான பிரச்சினைகள் தேவையற்றது. அதற்கு மொழி பெயர்ப்பாளர் என்று ஒருவர் தேவையில்லை. மொழி பெயர்ப்புப் பிரச்சினை இல்லாத இலங்கையைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார (11ஆம் பக்கம் பார்க்க)

## குறைவடையும் வாக்காளர் எண்ணிக்கை பறிபோகுமா நாடாளுமன்ற ஆசனங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்து 80 ஆயிரமாக குறைவடையும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த வகையில் எதிர்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவடையும் சாத்தியம் உள்ளதாகவும் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய வாக்காளர் இடாப்பை தயாரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும், இம் மாதம் 30 ஆம் திகதி மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பு தேர்தல் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் புதிய வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்றதாகவும், இதன்போது பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டதாகவும் வாக்காளர்களாகப் பதிவதற்கு தவறியவர்கள் முறைப்பாடு செய்வதற்கு கால அவகாசம் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் புதிய வாக்காளர் இடாப்பின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை நான்கு இலட்சத்து 80 ஆயிரமாக குறைவடையும் நிலைமையே காணப்படுகின்றது என்றும் குகநாதன் கூறினார்.

இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 8 இலட்சத்து 16 ஆயிரமாக இருந்தது. இந்நிலையில் புதிய வாக்காளர் இடாப்பின் பிரகாரம்

(11ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே..**

☞ உள்ளே கல்வி முரசு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

## மாதகலில் வெடி விபத்து; சிறார்கள் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் வெவ்வேறு வெடிவிபத்துக்களில் மூன்று சிறுவர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை மாதகலில் கட்டுத்துவக்குக்கு மருந்து நிரப்பிக் கொண்டிருக்கும் போது அது வெடித்ததில் படுகாயமடைந்த மூன்று சிறுவர்கள் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாலை 3 மணியளவில் சகாயபுரம் என்ற இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூன்று வயதுடைய ஆண், பெண் பிள்ளைகளும் 6 வயதுடைய ஆண் பிள்ளையொன்றுமே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் முகமாலையில் நேற்றுக் காலை இடம் பெற்ற வெடிவிபத்தில் படுகாமடைந்த ஹலோ டிரஸ்ற் (12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.உதயபுரத்தில் தும்புத்தொழிலகம் அமைச்சர் டக்ளஸ் துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- கொழும்புத்துறை உதயபுரம் கிராம இளைஞர், யுவதிகளின் சுயதொழில் வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு தும்புத் தொழிற்சாலையொன்று உடனடியாகவே நிறுவப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதிமொழி வழங்கினார்.

நேற்றைய தினம் கொழும்புத்துறை- உதயபுரம் பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களைச்சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மீள்குடியேறிய மக்கள் அமைச்சர் அவர்களிடம் தங்களது அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அவற்றில் முக்கியமாக குடிநீர், மலசலகூடம், சிறுவர் பாடசாலை, வீதிகள் புனரமைப்பு, வீட்டுத்திட்டம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கடல்நீர் அணைக்கட்டு மற்றும் சுயதொழில் வேலைவாய்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்த அமைச்சர் அவர்கள் பிரதேச சபை,நியாப் ஆகியவற்றினூடாக முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுக்க வேண்டிய அத்தியாவசிய வேலைத்திட்டங்களில் நிரந்தரக் குடிநீர்வசதி விரைவில் ஏற்படுத்தித் தரப்படுமென உறுதிமொழி வழங்கினார்.

இதனிடையே அப்பகுதி இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு அங்கு தும்புத் தொழிற்

(12ஆம் பக்கம் பார்க்க)



# முழுச் சம்பளத்திற்கு ஒப்பம் வழங்கப்படுவதோ அரைச்சம்பளம்

## வ.பி.போ.சபையின் பரிதாபநிலை

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச சாரதிகள், நடத்துநர்கள், திருத்துநர்களின் சம்பள முரண்பாடு தொடர்பிலான ஊழியர்களின் கோரிக்கை குறித்து சிறிலங்கா சுதந்திர தேசியப் போக்குவரத்து ஊழியர் சங்க யாழ்ப்பாண செயலாளர் தெரிவித்த கருத்துகளுக்கு ஊழியர்கள் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஊழியர்கள் குறிப்பிடுகையில் தமது கோரிக்கைக்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக 9.5.2011 அன்று பகுதிச் சம்பளப் பணம் வழங்க வந்த அதிகாரிகள் உரிய பதில் கூறவில்லை.

தாம் நிற்பதாகக் கூறியவர்கள் பத்திரிகையாளர்களின் வரவைக்கண்டு வெளியேறிவிட்டார்கள்.

நேற்று ஊதியம் பெறவிரும்புபவர்கள் ஊதியம் பெறலாம் எனவும், உள்ள பணத்தில் முதலில் வருபவர்களுக்கே குறித்தளவு பணம் வழங்கப்படும் என கூறியுள்ளார்கள். ஆயினும் எவரும் சம்பளத்தைப் பெற முன்வரவில்லை.

முழுச் சம்பளமும் பெற்றுக்கொண்டதாகக் கையொப்பம் இடவேண்டும். ஆனால் பகுதிச் சம்பளமே வழங்கப்படும் மீதி பின்னர் வழங்கப்படுவது அநிதியான செயல். புதிய பிராந்திய முகாமையாளர் இவற்றை சீர் செய்யவேண்டும் என எதிர்பார்த்தோம் ஆனால் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என ஊழியர்கள் தெரிவித்தனர்.

# வட்டு.நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் தற்காலிகத் தலைவர் கவிஞர் ஓய்வுபெற்ற அதிபர் திரு.வ.யோகானந்தசிவம் அவர்கள் தலைமையில் சிந்துபுரம் காந்திஜி சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாட்டுக்கூத்து அபிவிருத்தி பற்றியும் எதிர்காலத்தில் கிராம இளைஞர்களைக்கொண்டு நாட்டுக்கூத்தினை நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் 2011ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர் - கவிஞர், ஓய்வு பெற்ற அதிபர் திரு.வ.யோகானந்தசிவம், உப தலைவர் - திரு.க.நாகப்பு, செயலாளர் - திரு.மா.ஜெயக்குமார், உப செயலாளர் - செல்வன் நி.கஜந்தன், பொருளாலர் - திரு.வே.தவநிருபசிங்கம், நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நா.மீனேஸ்வரன், சி.அருணன், தெ.தயாளன், ச.கணநாதன், சி.சிங்கராசா, யோ.கௌரீசன், கௌரவ உறுப்பினராக திரு.மா.கணநாதன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# அபிவிருத்திக் குழுக் கூட்டம் அதிகாரிகளின் அதிசிரத்தை ஏன்?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்திக் குழுக்கூட்டங்களுக்குச் சம்பந்தப்பட்ட சகல திணைக்கள அதிகாரிகளும், கிராம மட்ட அமைப்புக்களும் கட்டாயமாகக் கலந்துகொள்ளவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் காலை 10 மணியளவில் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாய முன்னேற்றம் மற்றும் அதனுடைய தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதில் அரச அதிபர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

வருட ஆரம்பத்திலேயே மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்கள் அட்டவணைப் படுத்தப்பட்டு சகல திணைக்களங்களுக்கும், அந்தந்த கிராம அமைப்புகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுவரும் நிலையில் அங்கு நடைபெறும் கூட்டத்திற்கு சில கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சில திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொள்ளவில்லை.

இதைவிட மாவட்டத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களுக்கு அதிகாரிகள், அமைப்புப் பிரதிநிதிகள் சமூகமளிப்பதில்லை. இதனால் சம்பந்தப்பட்ட விடயங்கள தொடர்பாக கலந்துரையாட முடியாதநிலை ஏற்படுவதாகவும் பிரச்சினைகள் அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதில் காலதாமதங்கள் ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(110)

# உடுத்துறையில் திருட்டு

(வடமராட்சி)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கின் உடுத்துறை பத்தாம் வட்டாரத்தில் இரண்டாவது முறையாகவும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சிவகுரு கண்ணன் என்பவரின் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் இரவு குறித்த வீட்டினுள்ளவர்கள் உறக்கத்தில் இருந்தவேளை உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த உடுபுடவைகளின் பையை எடுத்துச்சென்று அருகிலுள்ள பனை வடலியில் கிளறி எறிந்துள்ளதுடன், அதிலிருந்த இரண்டு சங்கிலிகள், சிறுபிள்ளைகளின் தோடு, பத்தாயிரம் ரூபா பணம் என்பவற்றை எடுத்துச்சென்றுள்ளனர்.

அத்துடன் குறித்த பொதியிலிருந்த கண்ணனின் தேசிய அடையாள அட்டையையும், பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும்கூட கிழித்தெறிந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதுடன், பிரதேச சிவில் அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (38)

# கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த கிராமங்களில் பரவலாகக் கசிப்பு உற்பத்தி நடவடிக்கை இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதில் பாரதிபுரம், அறிவியல் நகர், சாந்தபுரம் என பல இடங்களில் இந்த கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் இதனால் அப்பகுதி இளைஞர்கள் இதற்கு அடிமையாகி வீதியோரங்களில் விழுந்து கிடப்பதாகவும் இதனால் அவ்வீதியூடாக இரவு வேளைகளில் பயணம் செய்யவிரும்புவோரும் அவர்கள் மேல் மோதுண்டு கீழே விழுந்து விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். அத்துடன் இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அப்பகுதி பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (35)

# விசேட சேவை

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து பூநகரி ஊடாக மன்னார் வரையான பேரூந்துசேவை யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து தினமும் காலை 7 - 8 மணிக்குப் புறப்பட்டு இச்சேவை சாவகச்சேரி, தனங்கிளப்பு ஊடாக பூநகரி மன்னார் வரை செயலாற்றப்படுகின்றது என்பதுடன், திருக்கேதீச்சரத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு 19.05.2011ஆம் திகதிவரை திருக்கேதீச்சரம் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி திருக்கேதீச்சரம் ஆலயம் வரை சென்று செயலாற்றப்படும் என்று பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10 மணிக்கு நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நகராட்சிமன்ற செயலாளர் பொ.யக்சீன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

எனவே இக்கலந்துரையாடலில் சனசமூக நிலையப் பிரதிநிதிகளைத்தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# அவசர ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும் வவுனியா மாவட்டத்தில் இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு ஆகிய வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளதால் மேன்முறையீடு செய்த பிரதி, முதல் நியமனக்கடிதம், மேன்முறையீட்டிற்கான காரணம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை சமூகமளிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# தென்மராட்சியில் பரிசில் நாள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் சைவசமய பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலய சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.ராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் பிரதம விருந்தினராகவும் ஓய்வு பெற்ற அதிபர்களான நா.அருட்சோதி, திருமதி எஸ்.ஜெயக்குமார் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிவநாதன், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் புகைப்படம் எடுக்கவிரும்புவோர் 50 ரூபா செலுத்தி எடுக்கமுடியும் என ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். (11)

# அனுமதியின்றி மணல்; வாகனச் சாரதி கைது

(சாவகச்சேரி)

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்ததுடன் பொலிஸார் நிறுத்தச்சொல்லியும் நிறுத்தாது சென்ற உழவு இயந்திர சாரதியைக் கொடிகாமம் பொலிஸார் கைதுசெய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் குற்றாவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி குறித்த சாரதிக்கு அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த குற்றத்திற்காக 50 ஆயிரம் ரூபாவும் பொலிஸார் மறித்தும் நிறுத்தாது சென்ற குற்றத்திற்காக ஆயிரம் ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறும், செலுத்தத்தவறின் 5 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டதுடன் மணலை பறிமுதல் செய்யுமாறு மன்றுக்கு உத்தரவிட்டார். (11)

# மிதிவெடி எச்சரிக்கை தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவுரைகள்

(யாழ்ப்பாணம்)




மிதிவெடி அபாய எச்சரிக்கைக் குறியீடுகள் பொருத்தப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் அவற்றைப் பொருட்படுத்தாது பிரவேசிப்பது உயிராபத்து, அவய இழப்புக்களை ஏற்படுத்தலாம் என மாவட்ட மதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

மிதிவெடி அகற்றப்படாத பிரதேசங்கள் மிதிவெடி என்று மூன்று மொழிகளில் பொறிக்கப்பட்ட மஞ்சள் பட்டிமூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. அங்கே மிதிவெடி அபாயம் எனும் சிவப்பு குறியீடும் பொருத்தப்பட்டுள்ளது. இவற்றுக்குள் பிரவேசிப்பதோ அவற்றை அகற்றுவதோ தவறான செயலாகும்.

கொழும்புத்துறைப் பகுதியில் அபாய எச்சரிக்கை குறிக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் மக்கள் அத்துமீறிப் பிரவேசிக்கின்றனர். குறியீடுகளை அகற்றுகின்றனர். இவற்றைத் தவிர்க்குமாறும், படிப்படியாக மிதிவெடி அகற்றப்பட்டதும் அவற்றுக்குள் பிரவேசிக்கலாம் எனவும தெரிவிக்கின்றனர்.

உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றிச் செல். கோழையாகவும், வேடதாரியாகவும் இருக்காதே.
- சுவாமி விவேகானந்தா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## என்ன செய்யக் கருதியிருக்கிறார்கள்?

பொலிஸ், காணி அதிகாரம் இல்லையென்றால், தீர்வை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று கூறி இருக்கிறது கூட்டமைப்பு. அரசு மூன்று மாதங்களுக்குள் தீர்வை வைத்தாக வேண்டும் என்றும் அது எச்சரித்திருக்கிறது.

அதாவது, வரும் ஆவணி மாதம் 10 ஆம் திகதி வரை நாமெல்லாம் ஒருவித பரபரப்போடு காத்திருக்கப்போகிறோம். கூட்டமைப்பின் தலைவர் வேறு தீர்வை வைக்காவிட்டால், தாங்கள் மாற்று வழி ஒன்றுக்குச் செல்ல நேரிடும் என்று ஏற்கனவே எச்சரித்திருக்கிறார். அதனால், ஆவணி பத்தின் பிறகு நடக்கப்போவது என்ன? என்ற திகிலும், விறுவிறுப்பும் இன்னும் அதிகமாகி ஒட்டுமொத்தத் தமிழினமே நகத்தைக் கடித்துக் கொண்டு காத்திருக்கும்படி ஆகியிருக்கிறது.

அரசு தீர்வை வைக்கப்போகிறதா இல்லையா என்ற பிரச்சினையைவிட, இவர்கள் எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே என்ற கவலை தமிழ் மக்கள் மீது வந்து இடியாக இறங்குகிறது. மூன்று மாதங்களுக்குள் இவர்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வை அரசு வைக்கச் சாத்தியம் இல்லை என்பது தமிழ்மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

அப்போ, ஆவணி பத்தின் பிறகான மாற்று வழி எதுவாக இருக்கும் என்று நாம் தலையைப் பிய்த்துக்கொண்டு ஆராய வேண்டி இருக்கிறது. ஆராய, ஆராய மனம் திகிலின் உச்சிக்கே செல்கிறது.

முதலாவது பயம், பழையபடி ஆயுதங்களைத் தூக்கும்படி இளைஞர்களுக்கு உஷார் ஏற்றிவிடுவார்களோ என்பது! இவர்களது உணர்ச்சிகரமான ஆவேசப் பேச்சுக்களையும், அறிக்கைகளையும் பார்க்கும்போது எழுபதுகளின் பிற்பகுதியை நினைவுபடுத்திக் கொண்டு திடுக்கிடும் படியாகத்தான் இருக்கிறது. ஆனால், இன்றைய இளைஞர்கள் ஆயுதங்களின் முடிவை கண்கூடாகப் பார்த்தவர்களாதலால், அப்படி உணர்ச்சிவசப்பட்டுப் பொங்கி விடமாட்டார்கள் என்பது நமக்குப் புரிகிறது. கூட்டமைப்பினருக்கும் இது புரிந்துதான் இருக்கும்.

அப்படியானால், இவர்களின் மனதில் இருக்கும் அந்த மாற்றுவழி வேறு எதுவாக இருக்கும்? இந்தியாவோ, ஐ.நா.வோ வந்து இலங்கை அரசை மிரட்டித் தீர்வைப் பெற்று தந்துவிடும் என்று நம்ப வைக்க முயல்கிறார்களா? அதுவும் இவர்கள் நினைப்பது போல் நடக்கிற அலுவல் இல்லையென்பதை மக்களே இவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிடுவர்.

அப்படியானால், வேறு என்னதான் அந்த மாற்று வழி? ஒருவேளை குற்றச்சாட்டுக்கள் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதையும், எதிர்ப்பு வீராவேச அறிக்கைகள் எழுதுவதையும், வெளிநாட்டுப் பயணங்களையும் நிறுத்தி வைத்து விட்டு, வீடு வீடாகச் சென்று மக்களை அணி திரட்டி அரசு தீர்வை வைக்கும் வரை சாத்வீகப் போராட்டங்களை நடத்துவது என்று முடிவெடுத்து விட்டார்களா?

நொந்து நொம்பலமாகியிருக்கும் மக்கள், அதற்குப் பெருமளவு காரணமான இவர்களை நம்பி வருவார்களா என்பது ஒருபுறமிருக்க, வாக்குக் கேட்பதற்குக் கூட மக்களிடம் செல்லாமல் வெறும் வீர வசனங்களிலேயே அவர்களை மயக்கிவிடும் வித்தையைக் கைக்கொள்ளும் இவர்கள், இந்தக் கடின உழைப்புக்குத் தயாரா என்பது சந்தேகத்துக்குரியதே.

மக்களிடம் சென்று அவர்களை ஒன்றுதிரட்டி அமைதிப் போராட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தும் எண்ணமும், நம்பிக்கையும் உள்ளவர்களானால் முதலில் அவர்களது வாழ்வுப் பாடுகளைச் சென்று பார்த்து, அந்த அல்லல்களிலிருந்து அவர்களை விடுவிக்கும் உதவிகளைச் செய்வதற்கான சிறு முனைப்பையாவது இவர்கள் காட்டியிருப்பார்கள். அதுவும் இல்லாமல், மக்கள் தாங்களாகவே போராட முன்வருவார்கள் என்று இவர்கள் கனவு காண முடியாது.

இவர்கள் எண்ணத்தில் இருப்பதெல்லாம், அடுத்து வரும் ஒரு தேர்தலுக்காக மக்களை அல்லல்களுடனும், வதைகளுடனும் ஆவேசப்படுத்தி வைத்திருப்பதொன்றே.

தீர்வை வைக்கச் சொல்லி மிரட்டுவதும், வைக்கவிடாமல் நிபந்தனைகளை உரக்க முழக்கி குழப்புவதுமான இந்த நாடகத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் மக்கள் பார்த்துப் பதைபதைத்துக் கொண்டிருக்க வேண்டும்? தமிழ்மக்களை இவர்கள் என்ன செய்யக் கருதியிருக்கிறார்கள்?

- ஆசிரியர்.

# விவசாயிகளிடம் நெல்லைக் கொள்வனவு செய்ய சங்கங்களிடம் போதியளவு நிதிவளம் இல்லை

## விவசாயக் கூட்டத்தில் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு சங்கங்களிடம் போதிய நிதிவளம் இல்லையென நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக்கூட்டத் தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் நெல்சந்தைப்படுத்தல் சபை ஆகியவற்றால் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வது முன்னர் நடைமுறையில் இருந்தது. அதில் குறிப்பாக விவசாயிகளிடமிருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது முழுமையாகக் கொள்வனவு செய்வதில்லை என்ற முறைப் பாடுகளை விவசாயிகள் இக்கூட்டத்தில் முன்வைத்த னர்.

இதில் கிளிநொச்சி கரைச்சி தெற்கு மற்றும் வடக்கு பல.நோ. கூட்டுறவுச் சங்கங்களே விவசாயிகளிமிருந்து நெல்லை முழுமையாகக் கொள்வனவு செய்வதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு கரைச்சி வடக்கு ப.நோ.கூட்டுறவுச்சங்கத் தலைவர் அ.கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் -

கூட்டுறவு அமைச்சு என்பது பாரம்பரியமாக இருந்து வந்த ஒன்று. இதன்கீழ் உள்ள இக் கூட்டுறவு அமைப்புக்கள் தங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இச்சங்கங்களினூடாக மாவட்டத்தின் மொத்த உற்பத்தியில் 3 சதவீத நெல்லை மட்டுமே கொள்வனவு செய்ய முடியும்.

விவசாயிகளிடமிருந்து மொத்தமாக நெல்லைக் கொள் வனவு செய்யக்கூடிய அளவு நிதிவளம் ப.நோ கூட்டுறவுச் சங்கங்களிடம் இல்லை.

இதைவிட இக்கூட்டுறவுச் சங்கங்கள் போரினால் பாதிப் படைந்த நிலையில் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையைக் கருத்தில் கொண்டே கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் விவசாய மற்றும் கால்நடை வளங்களுடன் தொடர்புபட்ட திணைக்கள அதிகாரிகள் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (28)

# வீதி அபிவிருத்திப் பணிகள் கிளிநொச்சியில் ஆரம்பம்

(வடமராட்சி)

கிளிநொச்சி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வன்னிப்பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த யுத்தகாலத்திற்குப் பின்னர் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அடுத்து இச்சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பாரிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பாலங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 வீதிகளும் 2 பாலங்களும் புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் கே.ஜெயவீரசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இவற்றில் தற்போது சில வீதிகள் கிரவல் வீதிகளாகவும் சிலவீதிகள் தார்வீதிகளாகவும் புனரமைக்கப்படவுள்ளதுடன் இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் அடுத்த மாதமளவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (100)

# போக்குவரத்து வசதி இல்லாததால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட சில கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லாத தால் பொதுமக்களும், பாடசாலை மாணவர்க ளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் புத்துவெட்டுவான், மருதங்குளம், தேறாங்கண்டல் ஆகிய இடங்களுக்கு போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பாடசாலை மாணவர்கள் சிரமத்தின் மத்தியில் பயணத்தைத் தொடரும் பரிதாப நிலை காணப்படுகிறது.

துணுக்காயில் இருந்து கொக்காவில் வரை செல்லும் பிரதான வீதியின் மையப்பகுதிகளில் இக்கிராமங்கள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் இக்கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படாமையால், இக்கிராமங்களைச் சேர்ந்த சுமார் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வேறு இடங்களுக்கு கால்நடையாக வும், துவிச்சக்கரவண்டிகள் மூலமும் தங்களது வசதிகளுக்கு ஏற்றவாறு சென்று கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வறிய குடும்பங்களைச் சேர்ந்த சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல வசதியில்லாமையால் தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இக்கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# திடீர் மின்தடையால் பலரும் பாதிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் திடீர், திடீரென, மின்சாரம் தடைப்படுவதனால் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக எவ்வித முன்னறிவித்தலுமின்றி மின்சாரம் தடைப்படுவதனால், பரீட்சையை எதிர்நோக்கி யிருக்கும் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், வர்த்தகர்கள், உட்படப் பலர் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், திடீர் திருத்தவேலை காரணமாகவே இந்தத் தடை ஏற்படுவதாகக் கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். (35)

# 14 ஆயிரம் தென்னம் நாற்றுகள் கிளிநொச்சியில் வழங்கப்பட்டன

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தென்னை அபிவிருத்திச் சபையினால் இதுவரை 14 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவான தெங்குப் பயிர்ச்செய்கை கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் அழிவடைந்துள்ளன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்திச்சபை பல்வேறு வழிகளிலும் பயனாளிகளைத் தெரிவு செய்து 14 ஆயிரம் தென்னம் நாற்றுக்களை பயனாளிகளுக்கு மானியமாக விநியோகித்துள்ளது.

தொடர்ந்தும் நல்லினத் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன் குறுகிய காலத்தில் பலனைத் தரக்கூடிய புதிய இனங்களை அறிமுகப்படுத்தி அவற்றை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தென்னை அபிவிருத்திச்சபை அலுவலர் தெரிவித்தார். (110)

# விசேட தேவையுடையவர்களை எவருக்கும் சுமையற்றவர்களாக உருவாக்க வேண்டும்

## வடமாகாண வலயக்கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணிலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களை, அவர்களுக்குத் தேவையான கல்வி, தொழிற்பயிற்சி என்பனவற்றை வழங்கி சொந்தக் காலில் நிற்க வைத்து, வீட்டுக்கோ, நாட்டுக்கோ சுமையற்றவர்களாக உருவாக்க வேண்டும். இந்த உயரிய நோக்கை அடிப்படையாகக் கொண்டே வலிகாமம் கல்வி வலயத்தில், இந்த விசேட கல்வி வளநிலையம், இன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இணுவில் மத்தியகல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட கல்வி வளநிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது -

இன்று விசேட கல்வித்துறை எல்லோராலும் பேசப்படும் துறையாக வளர்ந்து வந்துள்ளது. கல்வியில் சமவாய்ப்பைப் பேணினால் தான் உலக நாடுகள் நிதியுதவி வழங்கும். இலங்கையில், விசேட கல்வி வளர்ச்சிக்கென சர்வதேச



நிறுவனங்களும், தனியார் தொண்டு நிறுவனங்களும் உதவி வருகின்றன.

இந்த உதவிகளைப் பயன்படுத்தி விசேட தேவையுள்ள மாணவர் களைச் சொந்தக் காலில் நிற்க வைக்கவேண்டும். அவர்களை சமூக நீரோட்டத்தில் இணைக்க வேண்டும். இந்தப்பிள்ளைகளை வளத்துடன் வைத்திருக்க கலைப் பயிற்சிகள், கலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது தான் இந்த வளநிலையத்தை அமைத்ததன் நோக்கம் நிறைவேறும் வளநிலையம் முதன்மை பெறும். இத்தகைய வளநிலையங்களை வடமாகாணத்திலும் புளியங்குளத்திலும், மன்னாரிலும் அமைத்துள்ளோம். வலிகாமம் கல்வி வலயத்தைப் பொறுத்தவரை இந்த வளநிலைய முகாமையாளர் ந.முருகானந்தம் மிகுந்த அக்கறையோடும் அர்ப்பணிப்போடும் இந்தத் துறையை வளர்த்து வருகின்றார். விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி, யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் வலிகாமம் வலயப் பாடசாலையிலுள்ள பிள்ளைகளுக்கே நடத்தப்பட்டிருந்தது எனக் கூறினார்.

இவ்விழாவில், வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், இணுவில் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (06)

# சிற்றூழியர் மீதான தாக்குதல் மூவருக்கு விளக்க மறியல்

(மன்னார்)

மன்னார் நகரசபை சிற்றூழியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட ஐந்து பேரில் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் நகரசபை சிற்றூழியர் ஒருவர் மன்னார் தனியார் பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் இரவு நேர சுத்திகரிப்புக் கடமையில் இருந்தபோது, ஐந்து பேரடங்கிய குழுவினரால் கடந்த வாரம் தாக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து பேரும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இ.கஜஸ்பல்டானோ முன னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது, தாக்குதலுக்குள்ளான நபர் மூவரை அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து தீர்ப்பளித்த மன்னார் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணி, அடையாளம் காணப்பட்ட மூவரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.



வவுனியா நல்ன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டு, மீள் குடியமர்த்த அழைத்துவரப்பட்ட கொக்கிளாய் மக்கள் அங்குள்ள அ.த.க. பாடசாலை மைதானத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். (17)

# கலைப்பயிற்சிக்கான வளவாளர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை

(வவுனியா)

கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் கலாசார மத்திய நிலையத்தால் இந்த வருடம் நடத்தப்படவுள்ள கலைப்பயிற்சிக்கான வளவாளர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் வவுனியா பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பதுடன் 10 வருடங்கள் தொழில் அனுபவம் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வளவாளர்கள் நடனம், கர்நாடக சங்கீதம், நாடகம், நாட்டுக் கூத்து, ஓவியம், சிற்பம், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், முன்பள்ளி, சிங்களம், ஆங்கிலம் கற்பித்தல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு என்பவற்றை கற்பிப்பதற்கே அவசியமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"கலாசார மத்திய நிலையத்பதில் வளவாளர்களை இணைத்தல்" என இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு வவுனியா பிரதேச செயலகத்திற்கு உடன் கிடைக்கும் வண்ணம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# அமைச்சர் வாசுதேவ வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவநாணயக்கார, வவுனியா மாவட்ட செயலகத்தில் திணைக்களத் தலைவர்களை சந்தித்து நேறறு முன்தினம் திங்கட்கிழமை கலந்துரையாடியுள்ளார்.

மொழி அமுலாக்கலின் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், தேசிய மொழி அமுலாக்கல் விடயத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## தமிழ்விழா

(கொழும்புத்துறை)

புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் தமிழ்விழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இயேசுசபையின் அருட்திரு.யோசவ் மேரிசுவாமிகள் அடிகளும் சிறப்பு விருந்தினராக யாழ். மறை மாவட்டத்தின் குருமுதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசமும் கலந்து கொள்வார்கள். கலை நிகழ்வாக மட்டக்களப்புப் பாங்கில் அமைந்த நாட்டுக்கூத்து இடம் பெறவுள்ளது. (52)

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் கோழிக்குஞ்சுகள் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதில் ஆயிரத்து 940 வரையான ஊர்க்கோழிக் குஞ்சுகள் ஒருமாதம் வரை பராமரிக்கப்பட்டு அவை மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. (110)

# கரவெட்டி கோட்ட மட்டத்திலான தமிழ்மொழித்தின போட்டி முடிவு

(பருத்தித்துறை)

கரவெட்டி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு -

*பேச்சு*

பிரிவு -1

1 ஆம் இடம் - ம.அபிநயா (யாழ்.நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம் - சி.சுரேந்தர் (யாழ். மாணிக்க வாசகர் வித்தியாலயம்), 3 ஆம் இடம் -இ.வாகினி (ஞானாசாரியார் கல்லூரி).

பிரிவு -2

1 ஆம் இடம் - ஜெ.மதுரா (வடமராட்சி ம.ம.க), 2 ஆம் இடம் - வி.கங்காகௌரி (வல்வெட்டித்துறை இ.த.க.பா), 3 ஆம் இடம் - ஸ்ரீ.மதுவர்ணா (யாழ். கம்பர்மலை அ.த.க.வி).

பிரிவு - 3

1 ஆம் இடம் - த.அபிசேகா (யாழ். நெல்லியடி ம.ம.வி), 2 ஆம் இடம் - வ.சங்கீர்த்தனா (வடமராட்சி ம.ம.க), 3 ஆம் இடம - மு. சுபிர்ணா (யாழ். ஞானசாரியார் கல்லூரி).

பிரிவு -4

1 ஆம் இடம் - வி.விதுர்சா (யாழ். நெல்லியடி ம.ம.வி), 2 ஆம் இடம் - ப.நிரோஜினி (யாழ். இமையாணன் அ.த.க.பா), 3 ஆம் இடம் சா.பார்த்தீபன் (யாழ். கம்பர்மலை அ.த.க.பா).

*எழுத்து ஆக்கம்*

பிரிவு -1

1 ஆம் இடம் - த.தாரிணி (யாழ். ஞானாசாரியார் கல்லூரி), 2 ஆம் இடம் - ப.சாதுரியா (யாழ். அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தி), 3 ஆம் இடம் - இ.தசானா (யாழ். இமையாணன் அ.த.க. பாடசாலை).

*வாசிப்பு*

பிரிவு -1

1 ஆம் இடம் ஞ.கிருஷானி (யாழ். கரணவாய் மணில்காரன் தோ.வி), 2 ஆம் இடம் - வி.சஞ்சித் (யாழ். நெல்லியடி மெ.மி.த.ப பா), சு.திலக்ஷனா (யாழ். விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை).

பிரிவு -2

1 ஆம் இடம் - கெ.ரகுராஜ் ( யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி), 2 ஆம் இடம் சி.வித்தியா (யாழ். யாக்கரு வி.வி), 3 ஆம் இடம் அ.நூர்ஜன் (யாழ். உடுப்பிட்டி அ.மி.க).

*பாவோதல்*

பிரிவு -1

1 ஆம் இடம் ம.கோபிகா (மாணிக்கவாசகர் வி), 2 ஆம் இடம் - ஆ.தர்சினி (யாழ். நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), 3 ஆம் இடம் - சி.சயந்தினி (யாழ். இமையாணன் கல்லூரி).

(தொடரும்...)

# திருக்கேதீஸ்வர தேர்த் திருவிழா

(மன்னார்)

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் பாடல்பெற்ற திருத்தலமுமான மாந்தை திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மாந்தை திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 17 ஆம் திகதி தீர்த்தோற்வசமும் நடைபெறவுள்ளது. உற்சவ காலத்தில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகின்றது என ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# சமய விழுமியங்களைப் பின்பற்றுவதற்கு மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்!

## யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பேரின்பநாதன்


(யாழ். நிருபர்)

**இன்றைய சமூகத்தில் உயர்தர வகுப்பு மாணவர்கள் சமய விழுமியங்களைப் பின்பற்றுவது அருகி வருகிறது. இவர்களை ஆன்மீக நெறியில் வழிப்படுத்தி சமய விழுமியங்களைப் பின்பற்றி நடக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு பெற்றோரையும், ஆசிரியர்களையும் சார்ந்ததாகும் என யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பேரின்பநாதன் தெரிவித்தார்.**

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 57ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கழகத் தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், இன்று உயரதர வகுப்பு மாணவர்கள் சமய பாடப் பரீட்சை எழுதுவதற்குக்கூட தயங்குகிறார்கள். ஐந்தாந்தர புலமைப்பரிசில் பரீட்சை வரை பெற்றோரை மதித்து அவர் சொற்கேட்டு சைவசமய விழுமியங்களைப் போற்றிக் கடைப்பிடித்து வரும் பிள்ளைகள், உயர்தர வகுப்புகளுக்கு வந்தவுடன் சமய விழுமியங்களை மதித்து பின்பற்றி நடக்கத் தவறிவிடுகின்றனர்.

ஆரம்ப வகுப்புகளில் தமது பிள்ளைகளைக் கவனித்து வழிப்படுத்தியதைப் போன்று உயர்தர வகுப்புகளிலும் பெற்றோர் தமது பிள்ளைகளின் ஒழுக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். இளைய தலைமுறையினர் பெரியவர்களை மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பெற்றோர், ஆசிரியர், முதியோரிடம் அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொள்ள வேண்டும். சிறந்த சமய விழுமியங்களைக் கடைப்பிடித்து நடந்தால் எதிர்காலத்தில் ஒழுக்கம் நிறைந்த நல்லதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும். இதற்கு அதிபர், ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் ஊக்கமளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன், சிறப்புச் சொற்பொழிவாற்றினார். பரீட்சையில் விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் இடம் பெற்றது. (10)



கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்தும் முகமாக அண்மையில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் இணைந்து 2200 நீர் இறைக்கும் இயந்திரங்களையும், 200 தெளிகருவிகளையும் வழங்கி வைப்பதைக் காணலாம். இந்நிகழ்வு கடந்த எட்டாம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## கலைக்குழு கருத்தமர்வு

(கொழும்புத்துறை)

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கலைக்குழுவிற்கான பயிற்சிக் கருத்தமர்வு ஒன்று யாழ். மறை மாவட்ட இயக்குநர் அருட்பணி என்.வி.ஆர். ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலைத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் மற்றும் ஈடுபடுள்ளவர்கள் அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (52)

## சித்தியடையும் 5 மாணவர்களின் விபரத்தை அனுப்புமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தரம் 10 மாணவர்களுக்கான பாடசாலை மட்ட "உங்களுக்குத் தெரியுமா?" (Do you Know) எழுத்துப் பரீட்சையை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்தி விடைத் தாள்களைத் திருத்தி உயர் புள்ளிபெறும் ஐந்து மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இதற்குரிய வினாப்பத்திரங்களை மேற்குறிப்பிட்ட தினத்தில் காலை 8.00 மணிக்கு யாழ் கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## விஞ்ஞான பாட கற்றலுக்கு உபகரணங்கள் வழங்கல்

(நெடுங்கேணி)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வவுனியா வடக்குப் பிரதேசத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு விஞ்ஞான பாட கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களே இப்பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இதில் வவுனியா வடக்கிலுள்ள கனகராயன்குளம் மகா வித்தியாலயம், புளியங்குளம் மகாவித்தியாலயம், சின்னடம்பன் பாரதி வித்தியாலயம், நெடுங்கேணி மகா வித்தியாலயம், மதியாமடு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்கள் நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட பரிசோதனைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.(12)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(11.05.2011 – புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
சித்திரை 28 ஆம் நாள்.
நட்சத்திரம் : மகம் பி.இ. 4.25 வரை
திதி: அட்டமி மு.ப. 9.20 வரை
ராகுகாலம் 11.54 – 1.24
சுபநேரம் : 4.24 – 5.54

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– வீணான பயம், மனக் கவலை, பண வரவு.

ரிஷபம்:– தானதர்மம், காரிய சித்தி, பாராட்டு, கவலை.

மிதுனம் :– விபத்து, பண வரவு, காரியத்தடை, கவலை.

கடகம்:– மன அமைதி, வீண் விரயம், பண வரவு.

சிம்மம்:– வீண் அலைச்சல், பொருள் இழப்பு, அரசபயம், விபத்து.

கன்னி :– சோம்பல், வீண் செலவு, மனக்குழப்பம், கவலை.

துலாம் :– மன நிம்மதி, பண வரவு, காரிய சித்தி.

விருச்சிகம்:– விபத்து, பண வரவு, தேக சுபம், கவலை.

தனுசு:– பதவி உயர்வு, பணப்புழக்கம், உடல் நலம் பாதிப்பு.

மகரம்:– பண வரவு, வீண் பயம், விபத்து, கவலை.

கும்பம் :– மனச் சஞ்சலம், வீண் அலைச்சல், பண வரவு.

மீனம்:– விபத்து, பொருள் இழப்பு, வீண் செலவு செய்தல்.

# வீதி புனரமைப்பு, மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவேகானந்தநகர் கிழக்கு, மேற்கு மற்றும் உதயநகர் ஆகிய இரு கிராமங்களையும் இணைத்துச் செல்லும் 156ஆம் கட்டை வைலஸ் வீதி மிகவும் மோசமடைந்துள்ளதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி யுத்த அனர்த்தங்களினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் குன்றும் குழியுமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தினமும் இவ்வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே தமது பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரியபோதிலும், இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேறி வீடுகளை அமைத்து வாழ்ந்து வரும் நிலையில், வீதிப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட மின்சார வசதிகள் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும், மின்சாரம் தமக்கு அத்தியாவசியமானதொன்றாகக் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வீதியைப் புனரமைத்துத் தருவதுடன் மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

# "கூட்டுறவு நமது சொத்து" பரிசு பெறுவோர் விபரம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் "கூட்டுறவு நமது சொத்து" பரிசுதியத்திட்டத்தில் இணைந்தவர்களில் மூன்றாவது தடவையாக பரிசு பெறுபவர்களின் விபரம் வங்கி பொதுமுகாமையாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

பரிசு பெறுபவர்களின் பெயர் விபரம் வருமாறு: கிருஷ்ணபிள்ளை குகதாசன் (புற்றளை, புலோலி தெற்கு, புலோலி) 50 ஆயிரம் ரூபாவும், தங்கராசா வசந்தகுமாரி (பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறை) 25 ஆயிரம் ரூபாவும், சபாரத்தினம் சீவரத்தினம் (தேவரன், மந்திகை, புலோலி) 10 ஆயிரம் ரூபாவும் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் வல்லிபுரநாதன் சேந்தன் (உபயகதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி), வைரவிப்பிள்ளை தவமணி, (புற்றளை, புலோலி தெற்கு, புலோலி) நாகேஸ்வரசர்மா ஸ்ரீவிசாகசர்மா (உபயகதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி), கோகுலராஜ் நளாயினி (சாரையடி, புலோலி தெற்கு, புலோலி), கணேஸ்வரன் கபிலன் (கோவிற்கடவை, துன்னதலை மத்தி, கரவெட்டி), துவிதரன் கஜேந்திரன் (நறுவிலியடி, புலோலி தெற்கு, புலோலி), தங்கவேல் உமாவரன் (பளவத்தை, வியாபாரிமூலை), ஸ்கந்தராசா கணேஸ்வரன் (துன்னாலை வடக்கு, துன்னாலை), சிவசுப்பிரமணியம் சீதாதேவி (விநாயகமுதலியார் வீதி, பருத்தித்துறை), இரத்தினசிங்கம் பிரேம்குமார் (நீர்வேலி வடக்கு, நீர்வேலி) இராசதுரை பரமேஸ்வரி (வராத்துப்பளை, பருத்தித்துறை), பாலச்சந்திரன் தர்மினி (கதிர்காமர்கோவிலடி, வதிரி, கரவெட்டி), லோகதாஸ் அபிநயா (கரணவாய் தெற்கு, கரவெட்டி), சீ. உமாகாந்தன் (தில்லையம்புலம், கரவெட்டி கிழக்கு), மணிவண்ணன் பிரவீன் (கார்த்திகேசர் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை) ஆகியோர் தலா ஆயிரம் ரூபாவைப் பரிசாகப் பெற்றுக் கொண்டனர். (109)

## புவனேஸ்வரி ஆலய சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 11.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இதில் காலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை விசேட பூசை வழிபாடுகள், திருவூஞ்சல், பிராயச்சித்தம் என்பன இடம் பெறவுள்ளதுடன் கன்னாதிட்டி காளிகோயில் பிரதமகுரு சி. ஜோதீத்திரக்குருக்கள் தலைமையில் இவ் அபிஷேக கிரியைகள் நடைபெறவுள்ளன.

# இந்திய உயர்மட்டக்குழு வருகை அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை

## என்கிறது வெளிவிவகார அமைச்சு



(கொழும்பு)

இந்திய உயர்மட்டக் குழுவினர் இலங்கை வருவது தொடர்பில் தமக்கு எந்த விதமான உத்தியோகபூர்வ அறிவிப்புக்களும் கிடைக்கவில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ் மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பிரதீப் குமார் ஆகிய மூவர் அடங்கிய உயர்மட்டக் குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வரவிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

சர்ச்சைக்குரிய தருஸ்மன் அறிக்கை தொடர்பில் ஆராயும் நோக்கிலேயே இக்குழு இலங்கை வரவிருப்பதாகவும், இவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் முக்கியஸ்தர்களை சந்திக்கவிருப்பதாகவும் ஊடகங்களில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இந்திய உயர்மட்டக் குழுவினரின் இலங்கை விஜயம் தொடர்பில் தமக்கு எதுவித உத்தியோகபூர்வ அறிவிப்புகளும் அனுப்பப்படவில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இம் மாதம் 16ஆம் திகதி இந்தியா செல்வது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, இவ்விஜயத்தின் போது சர்ச்சைக்குரிய தருஸ்மன் அறிக்கை தொடர்பில் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான தருஸ்மன் அறிக்கையின் உண்மைத் தன்மை தொடர்பில் சீனா மற்றும் அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு அமைச்சர் பீரிஸ் தலைமையிலான குழு விளக்கமளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிபுணர் குழுவின் அடிப்படையற்ற தன்மை சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்தப்படும்

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் நம்பகத் தன்மையற்ற விடயம் மற்றும் அடிப்படையற்ற தன்மை ஆகியவை தொடர்பிலேயே சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்துவோம் என இலங்கையன் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

"பான் கீ மூன் நியமித்திருந்த நிபுணர்கள் குழுவின் தருஸ்மன் அறிக்கையானது எந்த விதத்திலும் அடிப்படையற்றதும், நம்பகத் தன்மையற்றதுமான தகவல்களைக் கொண்டுள்ளது. எந்தவித ஆதாரங்களும் இன்றி தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் அனைத்து விடயங்களையும் நிராகரித்துவருகின்றோம்.

இந் நிலையில் இது தொடர்பில் சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது சர்வதேச சமூகத்துக்கு எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் போது தருஸ்மன் அறிக்கையின் நம்பகத் தன்மையற்ற விடயம் மற்றும் அடிப்படையற்ற தன்மை ஆகியவை தொடர்பிலேயே தெளிவுபடுத்துவோம்.

எமது நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை மீறிய வகையிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எமது அரசாங்கம் அறிக்கையை நிராகரித்திருந்ததுடன், இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவு எமது நாட்டுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஏற்கனவே எமக்கு பாரிய ஆதரவு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.




## பாவனைக்குதவாத உணவுவிற்பனை மூன்று மாதங்களுக்குள் 1507 வழக்குகள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் பொது மக்களின் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்த 1507 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழககுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் 30ஆம் திகதிவரையான காலப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களிடம இருந்து 524,900 ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இன்னும் 217 வர்த்தக நிலையங்களுக்கு எதிரான வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் நாடு முழுவதும் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஐம்பதுவீதமான சாட்சியங்களே இதுவரை ஆய்வு செய்யப்பட்டன

## ஆணைக்குழு தெரிவிப்பு



(கொழும்பு)

உண்மையைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள சாட்சியங்களில் இதுவரை 50 சதவீதமான சாட்சியங்களே ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக இந்த ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:

"உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இதுவரை பெறப்பட்ட சாட்சியங்கள் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன், ஆணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் முதற்கட்ட வரைபைத் தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில், கடந்த காலங்களில் பெறப்பட்டுள்ள அதிகளவிலான சாட்சியங்கள் இன்னும் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

அதனால் தான் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் கால எல்லையை மேலும் ஆறு மாத காலத்தினால் நீடிப்பதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளோம்.

அதாவது இதுவரை சுமார் 50 சதவீதமான சாட்சியங்களே ஆய்வு செய்யப்பட்டுள்ளன. எனவே அனைத்து சாட்சியங்களையும் ஆய்வு செய்ததன் பின்னரே முழுமையான அறிக்கையைத் தயாரித்து வெளியிட முடியும்.

முக்கியமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிகவும் அதிகளவான சாட்சியங்கள் எழுத்து மூலமாகக் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# காணி,பொலிஸ் அதிகாரம் இல்லாத தீர்வை தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்களாம்


## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

(கொழும்பு)

காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத ஒரு அரசியல்தீர்வை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காணி,பொலிஸ் அதிகாரங்களை விட்டுக் கொடுத்து தீர்வு ஒன்றை எட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டிருந்த செய்தி தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சுக்கள் தொடர்பாக



தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சீர்குலைக்கவே இதுபோன்ற செய்திகள் பரப்பப்படுகின்றன.

அரசும், ஊடகங்களும் பக்கச்சார்பான முறையில் இத்தகைய மூன்றாந்தரச் செய்திகளைப் பரப்புகின்றன.

கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் செய்துள்ள தியாகங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் காட்டிக் கொடுக்காது. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் விவசாயத்தை மேம்படுத்த அமெரிக்கா 572மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

கடந்த காலப் போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியமர்ந்து வரும் வடபகுதி மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக 572மில்லியன் ரூபா நிதியுதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வடக்கிலுள்ள விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் யு.எஸ். எயிட் நிதியுதவியுடன் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. அவை வடக்கின் 7000 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

அதன் மூலம் வடக்கில் விவசாயத் துறையில் மறுமலர்ச்சியொன்றை உருவாக்கி, வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் பிளேக்கின் இலங்கை விஜயத்தின் போது வடக்கு விவசாய அபிவிருத்திக்கென இயந்திராதிகள், உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய கட்டடம் அமைப்பு

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை அலுவலகத்திற்கான புதிய கட்டடம் செட்டிகுளம் வீதியில் நெளுக்குளத்தில் அமைக்கப்பட்டுவருகின்றது.

39 மில்லியன் ரூபாய் செலவில் சகல வசதிகளும் கொண்டதாக இந்த கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருவதாக பிரதேச சபையின் தலைவர் க.சிவ லிங்கம் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் கடடட வேலைகள் முடிவடையு மெனவும் அவர் கூறினார்.

# துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(துணுக்காய்)

கடந்த வாரம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்விக் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் மாங்குளம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி மைதானங்களில் நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு-

**கரப்பந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

மல்லாவி மத்திய கல்லூரி, அணிஞ்சியர்குளம் அ.த.க.பாடசாலை, பாண்டியன் குளம் அ.த.க.பாடசாலை.

**17 வயதுப் பிரிவு - ஆண்கள**

மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகா வித்தியாலயம், பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு - ஆண்கள**

மல்லாவி மத்திய கல்லூரி, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

**15 வயதுப் பிரிவு - ஆண்கள**

பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், யோகபுரம் மகா வித தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி.

**17 வயதுப் பிரிவு - பெண்கள்**

பாண்டியன்குளம் மகா வித்தயாலயம், ஐயன்குளம் அ.த.க. பாடசாலை, மாங்குளம் மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

மாங்குளம் மகா வித்தியாலயம், துணுக்காய் அ.த.க.பாடசாலை, மல்லாவி மத்திய கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

மல்லாவி மத்திய கல்லூரி, கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, ஐயன்குளம் அ.த.க.பாடசாலை.

**17 வயதுப் பிரிவு - பெண்கள்**

ஐயன்குளம் அ.த.க.பாடசாலை, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

ஐயன்குளம் அ.த.க.பாடசாலை, மல்லாவி மத்திய கல்லூரி, பாலிநகர் மகா வித்தியாலயம்.

**எல்லே**

**19 வயது - ஆண்கள்**

யோகபுரம் மத்திய மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய மகா வித்தியாலயம், பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

**கிரிக்கெட்**

**19 வயது - ஆண்கள்**

கற்சிலை அ.த.க.பாடசாலை, பாலிநகர் மகா வித்தியாலயம், யோகபுரம் மகா வித்தியாலயம.

**19வயதுப் பிரிவு - பெண்கள்**

பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

**உதைபந்தாட்டம்**

**17வயதுப் பிரிவு - ஆண்கள**

மல்லாவி மத்திய கல்லூரி, கோட்டைகட்டி அ.த.க.பாடசாலை, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம்.

**19வயதுப் பிரிவு - பெண்கள**

கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, யோகபுரம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம். (42)

# ஞானமுருகன் வெற்றி


(யாழ்ப்பாணம்)

பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடந்த போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து விளையாடிய மயிலங்காடு ஞான முருகன் அணி 1:3 என்னும் கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதவுள்ளது. (21)

# ஐ.பி.எல் தொடரிலிருந்து ஷேவாக் அவுட்

(புதுடில்லி)



தோள்பட்டைக் காயம் காரணமாக சிகிச்சைக்குச் செல்லவுள்ளதனால் ஐ.பி.எல் போட்டிகளிலிருந்து ஷேவாக் விலகுகின்றார்.

தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாகத் தொடர்ந்து ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட முடியாதெனபதுடன், சிகிச்சைக்காக லண்டன் செல்லவுள்ளார் ஷேவாக்.

இந்த நிலையில் அவர் தலைமையேற்று வழிநடத்திய டெல்லி அணியை அவுஸ்ரேலிய வீரர் ஹோப்ஸ் வழிநடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் கல்வி வலய மெய்வன்மைப் போட்டிகள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்விக் கோட்டங்களுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான வலயமட்டப் போட்டி எதிர்வரும் 20ஆம், 21, 22ஆம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டமட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களினையும் பெற்றவர்களினை இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தேவையான ஒழுங்குகளினை மேற்கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் நா.ரவீந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (42)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிடா சக்தி திட்டப் பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து சிறந்த விளையாட்டு வீரர்களைத் தெரிவுசெய்து தேசிய அணியில் சேர்த்துக் கொள்ளும் முன்னேற்பாட்டுத் திட்டமாக "கிரிடா சக்தி" திட்டத்தின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறந்த விளையாட்டு வீரர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதன் ஓர் அங்கமாக எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று ஒட்டுசுட்டான் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி முகாமில் 13வயது முதல் 21 வயதுக்கு உட்பட்ட முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளைப் பங்குபற்றுமாறு விளையாட்டு முகாம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் குறிப்பிட்ட தகைமையினைப் பூர்த்தி செய்வோர் இனங்காணப்பட்டுத் தொடர் பயிற்சி வழங்கப்பட உள்ளதுடன், பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகளும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளனர். (42)




# சுஜாந்தின் அதிரடி ஆட்டத்தால் காமாட்சி அம்மன் வெற்றிபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்திற்கும், வண்ணார்பண்ணை காமாட்சி அம்மன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் சுஜாந்தின் அதிரடி ஆட்டத்தினால் 4 விக கெட்டுக்கள் வித்தியாசத்தில் காமாட்சி அமமன் கழகம் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களினைப் பெற்றுக் கொண்டது.

இதில் கிருபா 32 ஓட்டங்களையும், ரஜனி 23 ஓட்டங்களையும், சுரேன் 14 ஓட்டங்களையும், ஜெனோசன் 12 ஓட்டங்களையும், ஜெயசுதன் 11 ஓட்டஙகளையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் தீபன், ஜெனுதாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கஜீவன், சுஜாந், அயந், கிருபா, மோகன் ஆகியோர் தலா ஒரு விக்கெடுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 148 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அம்மன் விளையாட்டுக் கழகம் 21ஓவர்களில் 148 ஓட்டங்களினைப் பெற்று வெற்றி பெற்றுக்கொண்டது.

இதில் சுஜாந் 6 சிக்சர்கள் 8 பவுண்டரிகளின் உதவியுடன் ஆட்டம் இழக்காமல் 82 ஓட்டங்களை அதிரடியாகவும், கஜீவன் 16 ஓட்டங்களையும், கிருபா 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி அணியின் சார்பாக அனுராஜ், றஜனி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும், றஜீவ், வினோசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

இப்போட்டி இரு கழகங்களுக்கு இடையிலான சிநேக பூர்வ போட்டியாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (42)

# ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கொழும்புத் துறை றொசாரியன் சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியான 6 வீரர்கள் பங்குபற்றும் 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினை வெற்றிகொண்டு ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மொத்தமாக 22 ஓட்டங்களினை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் 5 ஆவது ஓவரில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 26 ஓட்டங்களினைப் பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (42)

# சிறுபிள்ளைத்தனமானது

(புதுடில்லி)


சூதாட்டத்தில் இந்திய வீரர்களுக்குத் தொடர்புள்ளதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது, சிறுபிள்ளைத் தனமானது என இந்தியக் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன்சிங் கூறியுள்ளாா.

இந்தமாதிரியான உண்மைக்குப் புறம்பான செய்திக்குக் கருத்துத் தெரிவிக்க முடியாது. தேவைப்பட்டால் இந்திய கிரிக்கெட் சபையிடம் ஆலோசிப்பேன். மற்றப்படி கருத்து எதனையும் தெரிவிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் முன்னணி விளையாட்டு இதழ் ஒன்று கிரிக்கெட் வீரர்களுக்கும், சூதாட்டத் தரகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதாகத் தெரிவித்து கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் இந்திய வீரர்களுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்களின் பெயர்கள் வெளியடப்படவில்லை. இது தொடர்பான தகவல்களை பி.சி.சி.ஐ மற்றும் ஐ.சி.சி ஆகியவற்றிடமே தெரிவிப்போம் என்றும் கூறப்பட்டுள்ளது. சண்டிகாரில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் சகவீரர் யுவராஜுடன் பங்கேற்ற ஹர்பஜன், இந்த விடயம் தேவையில்லாமல் ஊடகங்களால் பெரிதுபடுத்தப்படுகிறது என்றார்.

# மரியா ஜோஸ் தோல்வி

(ஸ்பெயின்)



ரோம் மாஸ்டர்ஸ் ரெனனிஸ் போட்டியில் கடந்த ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் வீராங்கனை மரியா ஜோஸ் மார்ட்டினஸ் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியைத் தழுவினார்.

அவரை ரஷ்ய வீராங்கனை எக்டரினா மகரோவா 6-0, 5-7, 6-4 செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

முன்னாள் பிரெஞ்சு ஓப்பன் சம்பியனான ரஷ்யாவின் ஸ்பெட்லனா குஷ்னேட்சோவாவும் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

அவரை கங்கேரி வீராங்கனை கிரேக்டா ஆன் 3-6, 7-6 (7-4), 7-6 (11-9) செற்கணக்கில் வென்றார். முன்னாள் இறுதிப் போட்டியாளரும் ஒன்பதாவது நிலை வீராங்கனையுமான பிரான்சின் மரியன் பர்டோலி 6-2, 6-3 செற்கணக்கில் ஸ்பெயின் அராண்ட்சா பரார சான்டோன்ஜாவை வெற்றிகொண்டார்.

# பின்லேடன் வளர்ச்சிக்குக் காரணம் அமெரிக்கா என்கிறது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பின்லேடனின் வளர்ச்சிக்கு அமெரிக்காவே காரணம் என்று பாகிஸ்தான் பிரதமர் கிலானி குற்றம் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் பின்லேடன் கொல்லப்பட்டார். இதுபற்றி, பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

பின்லேடன் கொலை மூலம் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. இருப்பினும், அதை வெற்றியாக அறிவிக்க பாகிஸ்தான் விரும்பவில்லை. பாகிஸ்தானில் எண்ணற்ற தீவிரவாதத் தாக்குதல்கள் மூலம் பலரின் சாவுக்குக் காரணமாக இருநதவர் பின்லேடன். அவரது சாம்ராஜ்யம் அழிக்கப்பட வேண்டும்.

தீவிரவாத எதிர்ப்புப் போரில், பாகிஸ்தான் இராணுவம் 30 ஆயிரம் பேரை இழந்துள்ளது. இருப்பினும், இப்போருக்கு தேசிய முக்கியத்துவம் அளிக்கிறது. தனது மண்ணில் தீவிரவாதச் செயல்களை அனுமதிக்காது. பாகிஸ்தான் மக்களைப் போல, எந்த நாட்டு மக்களும் இத்தனைச் சவால்களைச் சந்தித்து இருக்கமாட்டார்கள்.

பின்லேடனைக் கொல்வதற்காக, பாகிஸதானுக்குள் புகுந்து அமெரிக்க படைகள் தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்தியதை ஏற்க முடியாது. இது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும். இந்தத் தாக்குதல் பற்றி இராணுவ அதிகாரி ஜாவீத் இக்பால் விசாரணை நடத்துவார். பாகிஸ்தான் ராடார்களால் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அமெரிக்கா தனது தொழில்நுட்ப திறமையைக் காட்டியுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்கள், இரகசியமாகவோ, வெளிப்படையாகவோ நடத்தப்பட்டால், அதற்குப் பாகிஸ்தான் தக்க பதிலடி கொடுக்கும். முழுப்பலத்துடன் பதிலடி கொடுக்க பாகிஸதானுக்கு உரிமை உள்ளது. இதுபோன்ற அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டை பாதுகாப்பதற்கான கொள்கையை வகுக்க, வருகிற 13 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டம் நடைபெறும்.

பின்லேடன் விவகாரத்தில், பாகிஸ்தானை திறமையற்றதாகக் கருத முடியாது. பின்லேடன் மறைந்து வாழ நாங்கள் உடந்தையாக செயல்பட்டதாக கூறுவது முட்டாள்தனமானது. அல்கொய்தாவுடன் நெருக்கமாகச் செயல்பட்டதாக பாகிஸ்தான் மீதோ, அதன் உளவுப்படை மீதோ குற்றம் சாட்டுவது வஞ்சகமானது. சொல்லப்போனால், எங்கள் உளவுப்படையான ஐ.எஸ்.ஐ. துப்புக் கொடுத்ததால் தான், அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தி, பின்லேடனைக் கொல்ல முடிந்தது.

பின்லேடனின் இருப்பிடத்தை உலக நாடுகளின் உளவுத்துறைகளாலேயே கண்டுபிடிக்க முடியாதபோது, ஐ.எஸ்.ஐ.யின் பங்கு பாராட்டத்தக்கது. ஐ.எஸ்.ஐ. இந்த நாட்டின் சொத்து. தீவிரவாத எதிர்ப்பு போரில் அதன் பங்கு மகத்தானது. இந்தப் போரில், பாகிஸ்தான் அரசு அமைப்புகளிடையே எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. அனைத்தும் இணக்கமாக செயல்படுகின்றன என்றார்.

அல்கொய்தா உதயமானது பாகிஸ்தானில் அல்ல. பின்லேடனை பாகிஸ்தானுக்கோ அல்லது ஆப்கானிஸ்தானுக்கோ நாங்கள் அழைத்து வரவில்லை. ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் ஆதரவுடன் விடுதலை இயக்கம் தோன்றியது. அதுவே, பின்னர் அல்கொய்தாவாக மாறியது. எனவே, பின்லேடனின் வளர்ச்சிக்கு அமெரிககாவே காரணம். மற்றவர்களின் தவறுகளுக்கும், தவறான கொள்கைகளுக்கும் எங்களை குற்றம் சாட்டுவது சரியல்ல.

அதே சமயத்தில், அமெரிக்காவுடனான உறவுக்கு நாங்கள் உயர் முக்கியத்துவம் அளிக்கிறோம். எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரியின் பாகிஸ்தான் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கிறோம்.

வல்லரசு நாடுகளுடனும், அண்டை நாடுகளுடனும் பாகிஸ்தானின் உறவு நன்றாக இருக்கிறது. இந்தியாவுடனான பாகிஸ்தானின் நல்லுறவு, இருநாட்டு மக்களுக்கும் பலனளிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஒசாமாவைக் கொலை செய்வதற்கு பத்து வருடத்திற்கு முன் ஒப்பந்தம்

### என்கிறது கார்டியன்

(லண்டன்)

ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொலலப்பட்டமை தாக்குதல் முழுமையாக முடிந்த பிறகு தான் தெரியவந்ததாக பாகிஸ்தான் கூறியிருந்தது. இந்நிலை யில் தி கார்டியன் என்ற பத்திரிகை சுவாரஸ்ய செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கடந்த 2001 ஆம் ஆண்டு ஒசாமா பின்லேடன் ஆப்கனின் டோராபோரா மலையிலிருந்து தப்பிததுச் சென்ற பிறகு, அமெரிக்கா - பாகிஸ் தானுடன் ஒரு மறைமுக ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி ஒசாமா பாகிஸ்தானில் பதுஙகியிருப்பது தெரியவந்தால், எந்த ஒரு முன்னறிவிப்பு இல்லாமலும் அமெரிக்கா தனித்துத் தாக்குதல் நடத்தும் என ஒசாமா ஒப்பிறேஷன் 10 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி தான் நடந்துள்ளது என்றார்.




## உணவுப் பற்றாக்குறைக்குத் தீர்வு

## தாய்லாந்தில் உயர்மட்ட மாநாடு

(தாய்பே)

உலக நாடுகளில் அதிகரித்து வரும் உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பது தொடர்பான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்கான மாநாடு நேற்றுமுன்தினம் தாய்லாந்தில் ஆரம்பமானது.

அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப உணவுப் பொருட்களின் பாதுகாப்பு, அவற்றின் தற்போதைய நிலை தொடர்பாகவும் இது தொடர்பான ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான எதிர்கால ஒத்துழைப்புக் குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

தாய்லாந்து விவசாய அமைச்சர் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். இந்த மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

## ஹொலிவூட் நடிகையுடன் இளவரசர் ஹரி காதலா?



(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ்-டயானா தம்பதியின் மூத்த மகன் வில்லியம். இவருக்கும் கேட்மிடில்டனுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது. இவர்கள் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக காதலித்தது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் இளவரசர் வில்லியமின் தம்பியும், சார்ள்ஸ்- டயானா தம்பதியின் இளைய மகனுமான ஹரியும் காதலில் விழுந்துள்ளார். இவர் ஹொலிவுட் நடிகை சார்லி தெரோன் என்பவருடன் ஊர் சுற்றி வருகிறார். இவர்கள் இருவரும் காதல் ஜோடியாக வலம் வருகின்றனர்.

நடிகை சார்லி தெரோன் தென் ஆபிரிக்காவை சேர்ந்தவர். அங்கு இவர் எய்ட்ஸ் நோய் தடுப்பு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இளவரசர் ஹரியும் இதுபோன்ற சமூக சேவையில் ஈடுபட்டுள்ளார்.

தென்ஆபிரிக்காவில் அனாதைகள், ஏழைகள், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறார். அப்போது தான் இவர்களுக்குள் நட்பு ஏற்பட்டு பின்னர் அது காதலாக மலர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தனைக்கும் நடிகை சார்லி' தெரோன் இளவரசர் ஹரியை விட 9 வயது மூத்தவர். அவருக்கு 35 வயதாகிறது. ஹரிக்கு 26 வயதே ஆகிறது. ஏற்கனவே இவர் செஸ்லி டேவி என்ற பெண்ணை நீண்ட நாட்களாகக் காதலித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பின்லேடனை அமெரிக்கா கொல்லவில்லை

## ஈரானிய அமைச்சரின் பரபரப்புப் பேட்டி

(தெஹ்ரான்)

உலகையே அச்சுறுத்திய அல்கொய்தா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தான் அபோதாபாத் நகரில் கடந்த 2 ஆம் திகதி அமெரிக்க ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.


அதன் பிறகு அவரது உடலை கடலில் அடக்கம் செய்ததாக அமெரிக்கா அறிவித்தது. இதை ஈரான் அரசு மறுத்துள்ளது.

இதுகுறித்து அந்நாட்டின் உளவுத் துறை அமைச்சர் ஹைதர் மோஸ்லேகி ஒரு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது ·

அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்க ராணுவம் சுட்டுக் கொல்லவில்லை. உடல்நலக்குறைவால் அவதிப்பட்ட அவர் கடந்த சில நாட்களுக்கு முன்பே இறந்து விட்டார். அதற்கான நம்பத்தகுந்த மிகச் சரியான தகவல் எங்களுக்குக் கிடைத்துள்ளது.

· உண்மையிலேயே அவரை அமெரிக்க ராணுவம் மற்றும் உளவுத்துறை கைது செய்திருந்தாலோ அல்லது கொன்று இருந்தாலோ அவரது உடலை ஏன் காட்டவில்லை. உடலைக் கடலில் ஏன் வீசவேண்டும். எனவே இந்தச் செய்தி அப்பட்டமான பொய் யாகும்.

அமெரிக்காவில் நிலவும் உள்நாட்டு பிரச்சினையைத் திசை திருப்ப குறிப்பாக அங்கு நிலவும் பொருளாதார மந்த நிலை குறித்து மக்கள் எண்ணத்தை மாற்ற வெள்ளை மாளிகை அதிகாரிகள் பின்லேடன் கொல்லப்பட்டதாக பொய்ச் செய்தியை பரப்பியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## ஆளில்லா ஹெலி சீனாவின் சாதனை

(பீஜிங்)

சீனா நாட்டின் ஷான்டோங் மாகாணத்திலுள்ள வெய்வேங் சியான்க்சியாங் என்ற விண்வெளி நிறுவனம் ஆளில்லா ஹெலிகொப்டர் ஒன்றைச் சோதனை முயற்சியாகப் பறக்கச்செய்து சாதனை படைத்துளளது. இது 10 நிமிடங்கள் வரை பறந்து பின்பு பத்திரமாகத் தரை இறங்கியது. வி 750 என்ற மொடல் வகையைச் சேர்ந்த இந்த ஹெலிகொப்டர் மணிக்கு 161.கி.மீற்றர் வேகத்தல் சுமார் 4 மணிநேரம் தொடர்நது பறக்கும் திறன் பெற்றது. மேலும் தரையிலிருந்து 150 கி.மீ. தொலைவில் இதனைக் கட்டுப்படுத்தலாம் அல்லது தானாக இயங்கும் படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்நிறுவனத்தின் இயக்குநர் செங் ஷென் ஜாங் என்பவர் கூறும்போது, கண்காணிக்கும் பணி, தேடுதல் மற்றும் மீட்கும் பணி, இராணுவ மற்றும் உள்நாட்டுச் சேவைகளுக்கும் இந்த ஹெலிகொப்டர் பயன்படுத்தலாம் என்றார்.

## குண்டுவெடிப்பில் மூவர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கைபர் - பக்துவான் மாகாணத்தில் நீதிமன்ற வளாகத்தின் வெளியில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கி 3 பொலிசார் பலியாகினர். 5 பேர் படுகாய மடைந்தனர். குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியை பொலிஸார் தங்கள் பாதுகாப்பு வளையத்துக் குள் கொண்டு வந்தனர்.

# மும்பைத் தாக்குதலுக்கு உதவிசெய்த 4பாகிஸ்தான் அதிகாரிகள் மீது வழக்கு

(சென்னை)

மும்பை தீவிரவாதத் தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி மேஜர் இக்பால் உள்ளிட்ட அந்த நாட்டைச் சேர்ந்த 4 பேர் மீது அமெரிக்க நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2008, நவம்பரில், மும்பையில் தாஜ் ஓட்டல், சத்ரபதி சிவாஜி ரயில் முனையம், ஓபராய் ஹோட்டல் உள்ளிட்ட இடங்களில், பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில், அமெரிக்காவைச் சேர்ந்த ஆறு பேர் உட்பட, 166 பேர் பலியா யினர். இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு சதித் திட்டம் தீட்டிக் கொடுத்த அமெரிக்க வாழ் பாகிஸ்தானியரான டேவிட் கோல்மேன் ஹெட்லியை, அமெரிக்க பொலிஸார், சிக்காகோவில் 2009ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கைது செய்தனர்.

ஹெட்லி கொடுத்த தகவலின் பேரில், மும்பைத் தாக்குதல் சம்ப வத்துக்கு உதவிய மேலும் நான்கு பேர் மீது அமெரிக்க நீதிமன்றில், கடந்த மாதம் 25ஆம் திகதி குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

மும்பை தாக்குதல் சம்பவத்துக்கான ஆயத்த ஏற்பாடுகளைச் செய்ததாக சஜத் மிர் என்பவன் மீதும், தாக்குதலை நடத்த பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளித்த தாக அபு குவாபா என்பவன் மீதும், தாக்குதல் சம்பவத்துக்காக நிதி உதவி செய்த மேஜர் இக்பால் என்பவன் மீதும், மஜார் இக்பால் என்பவன் ஹெட்லிக்கு உடந்தையாக இருந்ததற்காகவும் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மும்பைத் தாக்குதலுக்கு சதித் திட்டம் தீட்ட ஹெட்லிக்கு உதவியாக பாகிஸ் தான் ராணுவ மேஜர் சமீர் அலி என்ப வரும்,மேஜர் இக்பால் என்பவரும் உடந் தையாக இருந்துள்ளனர். இவர்களுக்கு மத்திய அரசின் சார்பில் இன்டர்போல் மூலம் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.




## நேரு விருதுக்கு ஜேர்மன் பிரதமர் தெரிவு

(சென்னை)

ஜவஹர்லால் நேரு விருதுக்கு ஜேர்மன் நாட்டுப் பிரதமர் ஏஞ்சலா மேர்கல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெளியுறவுத்துறை வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

2009ஆம் ஆண்டிற்கான இந்த விருதுக்கு உரியவரைத் தேர்வு செய்ய துணைக் குடியரசுத் தலைவர் முகமது ஹமீது அன்சாரி தலைமையிலான குழு டெல்லியில் கூடி ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மேர்கலைத் தேர்ந் தெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த விருதில் ரூ.1 கோடி ரொக்கம், கேடயம் மற்றும் பாராட்டுப் பத்திரமும் அடங்கும்.

# மும்பை குண்டுவெடிப்பு சூத்திரதாரி பாகிஸ்தானில் பதுங்கி உள்ளார்

## உள்துறை அமைச்சர் சிதம்பரம் குற்றச்சாட்டு

(சென்னை)

மும்பை குண்டுவெடிப்பு வழக்கின் முக்கிய குற்றவாளி தாவூத் இப்ராஹிம் பாகிஸ்தானின் கராச்சி நகரில் வாழ் வதாக மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக தனியார் தொலைக் காட்சிக்குப் பேட்டி அளிக்கையில் ப.சிதம்பரம் கூறியதாவது,

இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட பல்வேறு தீவிரவாதத் தாக்குதல்களின் பின்னணியில் தாவூத் உள்ளார். பின் லேடன் தங்கள் நாட்டில் இல்லை என்று பாகிஸ்தான் அரசு தொடர்ந்து கூறி வந்தது. ஆனால், அது பொய் என்பது இப்போது உலகிற்குத் தெரிந்து விட்டது.



அதேபோல், தாவூத் பாகிஸ்தானில் இல்லை என்று அந் நாட்டு அரசு கூறி வருகிறது. அவர் கராச்சியில் உள்ள ஒரு வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்று கூறினார்.

# 2ஜி ஸ்பெக்ட்ரம் விசாரணை அறிக்கையை சபாநாயகர் நிராகரிக்குமாறு கோரிக்கை

(சென்னை)

**நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் முரளி மனோகர் ஜோஷி தன்னிச்சையாக செயற்படுகிறார் என்றும், அவர் அளித்த 2ஜி ஸ்பெக்ட்ரம் இறுதி விசாரணை அறிக்கையை சபாநாயகர் நிராகரிக்க வேண்டும் என்றும் மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி கூறினார்.**



சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணை அமைச்சர் வி.நாராயணசாமி,

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு தொடர்பாக விசாரணை நடத்த பாராளுமன்றம் அமைத்த பொது கணக்கு குழுவின் அறிக்கையை சபா நாயகர் ஏற்க வேண்டும் என்றும், இந்த பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பா.ஜ.க. கூறிவரு கிறது.

பொதுக் கணக்கு குழுவின் வேலை என்னவென்றால், மத்திய அரசின் தணிக் கை குழு, நிர்வாக துறை, பொதுத்துறை ஆகியவற்றின் கணக்கு வழக்கை சரி பார்த்து, அதில் ஏதாவது ஊழல் நடந் திருக்கிறதா? என்பதைக் கண்டறிந்து, அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆனால், 2ஜி அலைவரிசை ஒதுக்கீடு விசாரணையில், பொதுக் கணக்கு குழு வின் தலைவர் முரளி மனோகர் ஜோஷியின் நடவடிக்கை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் தன்னிச்சை யாக விசாரணை மேற்கொள்கிறார். குழுவில் உள்ள ஏனைய உறுப்பினர் களுடன் கலந்து ஆலோசிப்பது இல்லை.

தற்போது, 2ஜி அலைவரிசை ஒதுக் கீடு தொடர்பாக, இறுதி விசாரணை அறிக்கை ஒன்றை முரளி மனோகர் ஜோஷி தயாரித்து சபாநாயகரிடம் அளித்துள்ளார். இந்த அறிக்கையின் நகலை, பொதுக் கணக்கு குழுவில் உள்ள ஏனைய உறுப்பினர்களிடம், தாக் கல் செய்வதற்கு ஒரு நாளைக்கு முன்பு தான் அளித்துள்ளார்.

இதைப் பொதுக் கணக்கு குழுவில் உள்ள 21 உறுப்பினர்களில் 11 பேர் ஏற்க முடியாது என்று கூறியுள்ளனர். எனவே, அந்த அறிக்கையை சபா நாயகர் ஏற்க கூடாது. ஆனால், 2ஜி அலைவரிசை ஒதுக்கீட்டு பிரச்சினையை முன்வைத்து பா.ஜ.க., காங்கிரஸ் கட்சியை குறை கூறி வருகிறது.

இந்த விஷயத்தில் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வரு கிறது. சி.பி.ஐ. விசாரணை, அமுலாக்க பிரிவு விசாரணை, கோர்ட்டில் வழக்கு, மத்திய மந்திரியாக இருந்தவர் கைது என்று பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பா.ஜ.க.வைச் சேர்ந்த கர்நாடக முதல மந்திரி எடியூரப்பா ஊழல் வழக்கில் சிக்கியுள்ளார். அதுபற்றி வாய் திறக்காத பா.ஜ.க.வுக்கு, 2 ஜி அலைவரிசை ஒதுக்கீடு பிரச்சினை பற்றி பேசவே அரு கதை இல்லை. பொதுக் கணக்குக் குழு வின் தலைவர் முரளி மனோகர் ஜோஷி பா.ஜ.க.வின் ஏஜெண்டாகத்தான் செயல் படுகிறார்.

பா.ஜ.க. தொடர்ந்து பொய் பிரசாரம் செய்து வருகிறது. 2004,2009ஆம் ஆண்டுகளில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. தோல்வி அடைந்தது. எனவே, ஆட்சியை மீண்டும் பிடிக்க சதி செய்கிறார்கள். அதில் ஒன்றுதான், முரளி மனோகர் ஜோஷியின் இந்த நாடகம்.

பெரும்பான்மையான உறுப்பினர் களால் நிராகரிக்கப்பட்ட முரளி மனோ கர் ஜோஷியின் அறிக்கையை சபா நாயகர் ஏற்கக் கூடாது. மேலும், 4 ஆண்டுகளுக்கு முன்பு சிறந்த பாராளு மன்ற உறுப்பினர் என்று ஜோஷிக்கு வழங்கப்பட்ட விருதையும் திரும்ப பெற வேண்டும் என்றார்.

# காதலர்களை கொலை செய்பவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென எச்சரிக்கை



(புதுடில்லி)

ஒரு குடும்பத்தில் மகள் காதல் செய்தாலோ அல்லது காதல் திருமணம் செய்து கொண்டாலோ குடும்ப கௌரவம போய் விட்டதாகக் கூறி, அந்தப் பெண்ணைக் கொலை செய்து விடும் கொடூரம் வடமாநிலங்களில் அதிகம் உள்ளது. குறிப்பாக ராஜஸ்தான், உத் தரபிரதேசம், அரியானா மாநிலங்களில் இத்தகைய கொலைகள் அதிகம் நடக் கின்றன.

காதலித்த செயலுக்காக பெற்ற மகள் அல்லது மகனை ஈவு, இரக்க மின்றி கொல்லும் இத்தகைய சாதி மனப்பான்மை உடையவர்களை கருணை கொலையாளிகள் என்கிறார் கள். சமீபத்தில் டில்லியைச் சேர்ந்த ஒருவர் தன் மகளை கருணைக் கொலை செய்திருந்தார். அவர் தண்டனையை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றில் மனுச் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் கியான் சுதாமிஸ்ரா, மார்க் கண்டேய கட்ஜு தீர்ப்பில் கூறியதாவது:-

காதலிக்கும் மகளை படுகொலை செய்வது என்பது அநாகரீகமான செயல். காதல் திருமணம் செய்யும் மகன் அல்லது மகளைக் கொல்வதை சிலர் கௌரவமாகவும் மதிப்பாகவும் நினைக்கிறார்கள். குலப் பெருமைக்காக பண்பற்ற முறையில் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் இந்தக் கருணை கொலைகளை சமுதாயத்தில் இருந்து வேரறுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

இத்தகைய கொலையாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். மகள், மகனை கருணைக் கொலை செய்ய நினைக்கும் ஒவ்வொரு தந்தையும் தூக்குக் கயிறு தனனக்கு காத்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் கூறினார்கள்.

## கூட்டணியில் விரிசல் இல்லை

(சென்னை)

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் எந்தவித விரிசலும் கிடையாது என, மத்திய இணை அமைச்சர் நாராயண சாமி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,


நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியும், புதுச்சேரியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியும் அமோக வெற்றி பெறும்.

தற்போது நடைபெறும் ஆட்சியே 2 மாநிலங்களிலும் மீண்டும் தொடரும். தமிழக முதல்வராக மீண்டும் கருணாநிதி பொறுப்பேற்பார். தி.மு.க.காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது.

2ஜி அலைவரிசை ஒதுக்கீட்டில் நடந்து வரும் சி.பி.ஐ. விசாரணையால், தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியில் எந்த வித விரிசலும் கிடையாது. மிகவும் வலு வான கூட்டணியாகவே உள்ளது என் றார்.

# ஐ.நாவிற்கு முரணாக செயற்பட அரசாங்கம் முயற்சி செய்கிறது

## முன்னாள் பிரதம நீதியரசர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐ.நா.சபைக்கு முரணான வகையில் செயற்படுவதற்கு, அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற ரீதியில் பதிலளிப்பதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1947 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அங்கம் வகித்து வருகிறது.

எனவே குறித்த அறிக்கை தொடர்பில் அரசாங்கம் விரிவாக ஆராய்ந்து குறுகிய காலத்திற்குள் சிறந்த பதிலை அளிக்க வேண்டும்.

உரிய முறையில் ஐ.நாவிற்கு பதிலளிக்காது ஈரானின் பாதையில் பயணிப்பதற்கு இலங்கை முயற்சி செய்கிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாகவே ஈரானுக்கு எதிராக தற்போது பல்வேறு தடைகள் நடை முறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## போரில் உயிரிழந்த படையினர் நினைவாக

# உலகில் உயரமான புத்தர்சிலை அனுராதபுரத்தில் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் உயிரிழந்த படையினர் நினைவாக உலகின் மிகப்பெரிய புத்தர் சிலையை அரசாங்கம் அமைக்கவுள்ளது.

இந்தப் புத்தர்சிலையை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.06 மணியளவில் அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

குடாகெலெரேவ சிறிசாரங்கராமய குருந்தன்குளம என்ற இடத்தில்- 522 அடி உயரமான சமாதிநிலைப் புத்தர் சிலை அமைக்கப்படவுள்ளது.


இந்த நிகழ்வில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னதாக இந்தப் புத்தர் சிலையை வவுனியாவில் நிறுவப் போவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

பௌத்தர்கள் அதிகம் வசிக்காத வவுனியாவில் இந்தப் புத்தர்சிலை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்து அனுராதபுரத்தில் இந்தப் புத்தர் சிலையை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# பல்கலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் சமுதாயத்தில் முறைகேடாக நடக்கக் கூடாது

## உயர்கல்வி அமைச்சர் அறிவுறுத்து



கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர்

(கொழும்பு)

**நான்கு வருடங்களாகப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களை, முறைகேடான வகையில் செயற்படுபவர்களாக வெளியேற்றமுடியாதெனவும், இவ்வாறு அவர்கள் வெளியேற்றப்பட்டால் அதற்கு விரிவுரையாளர்களே பொறுப்பேற்க வேண்டுமெனவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்க தெரிவித்தார்.**

மேலும் தெரிவிக்கையில்:

நாட்டுக்காக மாத்திரமின்றி உலகிற்காகவும்,பல்கலைக்கழகங்களின் ஊடாக சிரேஷ்ட பிரஜைகளை உருவாக்க வேண்டியகாலம் வந்துள்ளது.

இதற்கு பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் சமூகத்தில் சென்று தொழில் தேடுபவர்களாக இருக்காது, அவர்களின் கல்வித்தகைமைக் கேற்ப உரிய தொழில்வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் வழிவகுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# குருத்துவ திருநிலைப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மரியன்னை பேராலயத்தில் குருத்துவ திருநிலைப்படுத்தும் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்சகோதரர்களான லக்ஸ்மன், எல்மோ, சுமன் ஆகியோருக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருநிலைப்படுத்தும் சடங்கை நிறைவேற்றி வைப்பார். (21)

# பிரதான வீதிக்கருகில் சந்தை விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(முறிகண்டி)

இரணைமடுச் சந்தியிலிருந்து அறிவியல் நகருக்குச் செல்லும் வீதியில் பொதுச்சந்தை இயங்கிவருவதனால் பல்வேறு தரப்பினரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

ஏ9 வீதியிலிருந்து ரயில் பாதையூடாக அறிவியல் நகருக்குச் செல்லும் பிரதான வீதியிலேயே தற்போது பொதுச்சந்தையும் சிறியளவிலான வர்த்தக நிலையங்களும் இயங்கி வருகின்றன.

இந்தப் பிரதான வீதியூடாக பாரவூர்திகள் சென்றுவருவதனாலும் பொதுச் சந்தையும் இயங்கிவருவதனாலும் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இப்பகுதியில் சந்தை இயங்குவதற்கு காணி வழங்கப்பட்டு அவ்விடத்திலேயே சந்தையும் இடம் பெற்று வந்தது. ஆனால் தற்போது சந்தை இயங்கிய இடத்தில் படையினர் உள்ளதனால் சந்தையை இயக்குவதற்கு காணி எதுவும் ஒதுக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே மேற்படி சந்தை பிரதான வீதிக்கருகில் இயங்கிவருகின்றது.

இது தொடர்பாக வர்த்தகர்கள் உரிய அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தபோதிலும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேவேளை ரயில் பாதை புனரமைக்கப்பட உள்ளதனால் அங்குள்ள வர்த்தக நிலையங்களை அகற்றுமாறு அதிகாரிகள் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்குத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் தமக்கு மாற்றிடம் எதுவும் வழங்கப்படாத நிலையில் தம்மை வேறிடம் செல்லச்சொன்னால் தாம் எங்கே செல்வதென அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுதொடர்பாக அதிகாரிகள் உரிய கவனமெடுத்து சந்தைக்குரிய காணியொன்றை வழங்க வேண்டுமென வர்த்தகர்கள் கேட்கின்றனர். (35)

# யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான இளைஞர்,யுவதிகளுக்கு பயிற்சி

(கொழும்பு)

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள இளைஞர், யுவதிகளின் மனோநிலை மற்றும் வாழ்வாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் விசேட பயிற்சிநெறிகள் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித்தார்.

இவர்களுடைய ஆளுமையினை விருத்தி செய்யும் நோக்கில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தலைமைத்துவம், முகாமைத்துவம், மக்கள் தொடர்பாடல், இதனை உள்ளடக்கிய வகையில் நடைபெறுகின்ற பயிற்சியை பூர்த்தி செய்பவர்களுக்கு இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பயிற்சியின் பின்னர் இவர்கள் தத்தமது பிரதேசத்தில் சமூகத் தொண்டர்களாகச் சேவையாற்ற அமரத்தப்படுவார்கள்.

கடந்த காலத்தில் இந்தப் பயிற்சி 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. இம்முறை இளம் சமுதாயத்திற்கு சிறப்பு அம்சமாக வழங்கப்படுதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நன்னீர் மீன்பிடித்திட்ட விஸ்தரிப்பு 180 புதிய அதிகாரிகள் நியமனம்



(கொழும்பு)

நன்னீர் மீன்பிடித் திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான நோக்கில் 180 புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

இந்த வருடம் நன்னீர் மீன் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டிலுள்ள 12 ஆயிரம் நீர் நிலைகளில் நன்னீர் மீன் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

குறித்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அவற்றுள் எட்டாயிரம் நீர் நிலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் களப்பிலும் விசேட நன்னீர் மீன் உற்பத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நோக்கில் மீன் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் இந்தத் திட்டம் வெற்றியும் அளித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் நன்னீர் மீன் உற்பத்தி நான்காயிரம் மெற்றிக்தொன்களால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் குருமட மாணவர்களின், தனிநாயகம் தமிழ் மன்றத்தினர் நடத்தும் இலங்கையின் திருத்தூதர் ஜோசப்வாஸ் என்னும் மட்டக்களப்பு பாங்கிலமைந்த நாட்டுக்கூத்து நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இயேசுசபையின் ஜோசப் சுவாமிகளும், சிறப்பு விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் விருந்தினர்களின் உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம பெறவுள்ளன. (21)

# தமிழ் மொழி அமுலாக்கம் துரித நடவடிக்கை அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்



தமிழ் மொழிஅமுலாக்கத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக் கையை எடுக்கவேண்டியது அவசியம் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற "மொழி சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்" என்ற பொருளில் அமைந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நடவடிக்கையை மேற்கொள்ளும் அமைச்சராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது சந்திரகுமார் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது.

1989ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாக அறிவிப்புச் செய்யப் பட்டது. அந்த அறிவிப்புக்களுக்கேற்ற தமிழ் மொழி அமுலாக்க நடவடிக்கைகள் முழுமைப் படுத்தப்படவுமில்லை, நடைமுறைப்படுத்தவும் இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் படும் அறிவுறுத்தல்கள் உட்பட பல சுற்றறிக்கைகள் சிங்களத்திலேயே அதிகமாக விடுக்கப்படுகின்றன.

அரச திணைக்களங்கள் பலவற்றிலும் கூட இதே நடைமுறைதான் உள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கு விடுவிக்கப்படும் அறிவிப்புக்கள், விண்ணப்பப் படிவங்கள் பலவும் கூட சிங்களத்திலேயே வெளியிடப்படுகின்றன. இதனால் இதனை அவர்கள் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சிரமம் காரணமாக தமிழ்ப்பிரதேசங்களுக்கு அரசினால் விடுக்கப்படும் பல அறிக்கைகள், அறிவித்தல்களும் கிடப்பில் போடப்படுகின்றன.

இதே போல தமிழ் மொழி மூலம் அனுப்பப் படுகின்ற விண்ணப்பங்களும், கடிதங்களும், கோவைகளும் சிங்களப்பகுதிகளிலும், மேல் இடங்களிலும் கிடப்பில் போடப்படுகின்றன. இந்நிலையினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் சாதாரண மக்களே!

இது தொடர்பாக நாம் அரசாங்கத்திடம் கேட்டால் தமிழ்மொழிக்கு எந்தத் தடையும் இல்லை. சிங்களத்தை மட்டும் பிரயோகிக்கவேண்டும் என்ற கட்டாயம் எதுவும் கிடையாது. என்று சொல்லப்படுகின்றது. ஆனால், இந்தப்பிரச்சினைக்கு ஒரு முழுமையான தீர்வும் நடவடிக்கைகளும் அவசியமாக இருக்கிறது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களுக்குப் பொருத்தமான அமைச்சுக் கிடைத்துள்ளது. தேசிய நல்லிணக்கத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் மிகவும் பொருத்தமான ஒரு வடிவமாக வாசுதேவ நாணயக்கார இருக்கிறார். தமிழ் மக்களிடம் நல்ல அபிப்பிராயத்தையும், மதிப்பையும் பெற்ற வாசுதேவ நாணயக்கார தமிழ்பேசும் மக்களின் உரிமைப்பிரச்சினை தொடர்பாக ஆழமான புரிதலுடையவர். ஆகவே தமிழ்மொழி அமுலாக்கத்திலும் அவர் மிக விரைவாக நடைமுறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்வார் என்று அமைச்சரைப் பற்றிய நம்பிக்கையையும் நல்லபிப்பிராயத்தையும் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எனத் தெரிவித்தார்.

# "ஸ்கைப்" நிறுவனத்தை கைப்பற்றியது மைக்ரோசொவ்ட்

இணையம் மூலமான தொலைபேசி சேவைவழங்கும் பிரபல "ஸ்கைப்" (Skype) நிறுவனத்தை மைக்ரோசொவ்ட் நிறுவனம் 8.5 பில்லியன் டொலர்களுக்கு (93,098 கோடி இலங்கை ரூபா) வாங்குவதற்கு சம்மதித்துள்ளது.

மைக்ரோசொவ்ட் நிறுவனம், மற்றொரு நிறுவனத்தின் சேவையை வாங்குவதற்கு அதன் வரலாற்றில் செலுத்தும் மிகப்பெரிய தொகை இதுவாகும்.

லக்ஸம்பேர்கை தளமாகக் கொண்ட ஸ்கைப் நிறுவனம் 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. உலகம் முழுவதும் அதற்கு 663 மில்லியன் வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

சுவீடனைச் சேர்ந்த நிகலஸ் ஸென்ஸ்ட்ரோம் மற்றும் டென்மார்க்கை சேர்ந்த ஜானுஸ் பிரிஸ் ஆகியோர் ஸ்தாபித்த ஸ்கைப் நிறுவனத்தை பிரபல ஏலவிற்பனை இணையத்தளமான ஈ-பே 2006 ஆம் ஆண்டு 200 கோடி டொலர்களுக்கு வாங்கியது.

பின்னர் 2009 ஆம் ஆண்டு 70 சதவீதமான பங்குகளை 200 கோடி டொலர்களுக்கு அந்நிறுவனம் மீள் விற்பனை செய்தது.

இப்போது அந்நிறுவனத்தை 850 கோடி டொலர்களுக்கு மைக்ரோசொவ்ட் நிறுவனம் வாங்குகிறது.

# பல வருட எரிபொருள் திருட்டு படையினரிடம் சிக்கியது

## தலைநகரில் சம்பவம்

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டிலிருந்து கிராண்ட்பாஸ் பகுதியில் இடம் பெற்று வந்த ஒரு பாரிய எண்ணெய் மோசடி விசேட அதிரடிப் படையினரால் கடந்த திங்கள் முறியடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தரப்பினருக்கு விற்பதற்காக சட்டத்துக்கு மாறான வகையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 16,600 லீற்றர் டீசல் இம்முற்றுகையின்போது கைப்பற்றப்பட்டதாக விசேட அதிரடிப படையின் கொமாண்டர் ஆர்.டபிள்யூ.எம்.சி. ரணவன தெரிவித்தார்.

இது தொடர்பில் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அரச நிறுவனங்களின் வாகனங்களிலிருந்து திருடப்படும் எரிபொருள், கிறீஸ் என்பவற்றை மலிவாக வாங்கி மீண்டும் விற்று வந்தனர்.

இந்த எரிபொருள் களஞ்சியம் கிராண்பாஸில் உள்ள ஸ்டேடியம் கமவில் அமைந்திருந்தது. அங்கிருந்து, ராஜகிரிய முகாமை சேர்ந்த விசேட அதிரடிப் படையினர் பல வகையான எரிபொருட்களையும் கிறீஸையும் கைப்பற்றினர். களவாக எண்ணெய் எடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட அரசாங்க நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான "டபிள்கெப்" வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

# திருமணத்துக்குத் தடை வருகிறது புதிய சட்டம்

## தலசீமியா நோயாளிகளுக்கு மட்டும்

தலசீமியா நோய் கொண்ட ஜோடிகள் திருமணம் செய்வதற்கு தடை விதிக்கும் சட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தலசீமியா நோயைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி திருமணம் செய்யவுள்ள ஜோடிகள் திருமணத்திற்கு முன்னர் இரத்தப் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயமாக்கப்படும்.

இரத்தப்பரிசோதனையில் சாதகமான பெறுபேறு கிடைக்காவிட்டால் அவர்கள் திருமணம் செய்வதற்கு தடைவிதிப்பதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்துவதைத் தவிர சுகாதார அமைச்சுக்கு வேறு தெரிவுகள் இல்லை என அமைச்சர் சிறிசேன கூறினார்.

### குறைவடையும்..

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் 8 இலட்சத்து 16 ஆயிரமாக இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்து 80 ஆயிரமாக குறைவடைந்தால் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் குறைவடையும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலைமையில் யாழ். மாவட்டத்திலிருந்து ஒன்பது பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்நிலையில் புதிய வாக்காளர் எண்ணிக்கையின் பிரகாரம் எம்.பி. க்களின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்று என்ற எண்ணிக்கையினால் குறைவடையலாம் என்று கருதப்படுகின்றது. எனினும், இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்ட குகநாதன் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இன்னும் ஐந்து வருடங்கள் உள்ளன. அதற்கிடையில் பல தடவைகள் வாக்காளர் இடாப்பு புதுப்பிக்கப்படும். அந்த வகையில் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எந்த அளவில் குறைவடையும் என்று கூற முடியாது. இது தொடர்பான தீர்மானத்தை தேர்தல் ஆணையாளரே எடுப்பார் என்று கூறினார்.

### இலங்கைக்கு ஐ.நா...

இவர் தனது உத்தியோகபூர்வ கடிதத்தை நேற்று செவ்வாய்க்கிழமை வெளிவிகார அமைச்சிடம் கையளித்தார். ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளராக இவரை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சிரேஷ்ட ஐ.நா அதிகாரியான இவர் இலங்கையிலுள்ள 20 ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்களுக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

ஐ.நாவில் இருபது வருட அனுபவமுள்ள சுபேனி நந்தி இறுதியாக சீனாவுக்கான ஐ.நா வதிவிட பிரதிநிதியாகக் கடமையாற்றியதுடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பல புதிய திட்டங்களுக்கு தலைமை தாங்கியுமுள்ளார்.

பங்களாதேஷைப் பிறப்பிடமாக கொண்ட இவர் ஆங்கிலம், ரஷ்ய மற்றும் வங்காள மொழிகளைப் பேசக்கூடிய பொருளியல் கலாநிதியாவர்.

1952ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் காரியாலயம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பின் 18ஆவது நிரந்தர பிரதிநிதியாக இவர் பதவியேற்றுள்ளார்.

### மும்மொழி அறிவு...

தெரிவித்தார்.

யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற தேசிய மொழிக்கொள்கைகள் மற்றும் அரச கருமமொழிகள் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இங்கு நிலவும் மொழி தொடர்பான பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு சிங்களம் பேசும் பகுதிகளுக்கும் தமிழ் பேசும் பகுதிகளுக்கும், மத்திய அரசிற்கும் மாகாண அரசிற்கும் இடையில் தொடர்புகள் தேவைப்படுகின்றன.

சிங்களப் பகுதிகளில் சிங்களத்தில்தான் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழ்ப்பகுதிகளில் தமிழில்தான் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதே மக்கள் கருத்துப்பரிமாறிக்கொள்வதற்கான ஊடகம்தான் மொழி ஒவ்வொருவரது உணர்வுகளை ஒருவர் மொழிபெயர்க்க முடியாது. இவ்விடயங்கள் தொடர்பாக இங்கு பிரச்சினைகள் இருக்கின்றன.

இந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எல்லா மக்களும் சேர்ந்து ஒரு வானவில்லை உருவாக்குவோம். உங்களது. கூற்றுக்களைக் குறித்துக் கொண்டுள்ளேன் இவற்றிற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக இந்த தருணத்தில் நாள் உறுதிகூறுகின்றேன் எனவும் தெரிவித்தார். (பா)

# போருக்குப் பிந்திய ஊடகப் போக்கு

## வவுனியாவில் செயலமர்வு

(வவுனியா)

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இதழியல் கல்லூரி இணைந்து வவுனியாவில் ஏற்பாடு செய்திருந்த வடபிரதேச ஊடகவியலாளர்களுக்குரிய போருக்கு பின்னரான செய்தியறிக்கையிடல் தொடர்பான செயலமர்வில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் 30 பேர் கலந்து கொண்டனர்.

போருக்கு பின்னர் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டது. 'மிரர்' பிரதி செய்தி ஆசிரியர் ஐயூப், ஊடகவியலாளர் லசந்த றுகுனுகே செயலமர்வை நடத்தினார்கள்.

யுத்தம் முடிவடைந்துவிட்டது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனை வெளிக் கொணர்வது ஊடகவியலாளர்களுடைய கடமையாகும் என செயலமர்வை ஆரம்பித்து வைத்து பேசியபோது ஐயூப் தெரிவித்தார்.

இடம்பெயர்வு, மீள்குடியேற்றம், அபிவிருத்தி, அரசியல் தீர்வு விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



[illegible] படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# அகதிகள் படகு கவிழ்ந்தது; நூற்றுக் கணக்கானோர் பலி

## மத்தியதரைக் கடலில் சோகம்

லிபியாவிலிருந்து அகதிகளை ஏற்றிக்கொண்டு ஐரோப்பா நோக்கிச் சென்ற படகொன்று மத்திய தரைக்கடலில் கவிழ்ந்ததால் நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுவதாக அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

சுமார் 600 குடியேற்றவாசிகளுடன் சென்றுகொண்டிருந்த இப்படகு கடந்த வெள்ளிக்கிழமை கவிழ்ந்துள்ளது. இதுவரை 16 உடல்கள் மாத்திரம் கரையொதுங்கியுள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

லிபியா மீது நேட்டோ படைகள் தாக்குதல் நடத்திவரும் நிலையில் அங்கிருந்து மேற்படி குடியேற்றவாசிகள் வெளியேற முற்பட்டுள்ளனர்.

மீட்பு நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பாகவுள்ளனர் என்ற விபரம் வெளியாகவில்லை. எனினும், தமது கப்பல்களோ, விமானங்களோ இம்மீட்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை என நேட்டோ தெரிவித்துள்ளது.

குடியேற்றவாசிகளுடன் லிபியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு சென்றுகொண்டிருந்தபோது பல நாட்களாக அலைக்கழிந்த மற்றொரு கப்பலிலிருந்த 72 பேரில் 61 பேர் தாகத்தினாலும், பசியினாலும் இறந்ததாகத் செய்திகள் வெளியாகி ஒரு நாளின் பின்னர், 600 பேருடன் மேற்படி படகு கவிழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேட்டோ அமைப்பின் கப்பலும், ஹெலிகொப்டரும் 72 பேருடன் சென்ற படகு தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்ட போதிலும், புறக்கணித்துச் சென்றதாக குற்றம் சுமத்தப்படுகிறது. எனினும், நேட்டோ அமைப்பு அதை மறுத்துள்ளது.

# வடக்கில் விசேட செயற்திட்டங்கள் அடுத்தவாரம் முதல் செயற்படும்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன யாழ்.விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

அமைச்சர்கள் ஜோன் செனவிரட்ன, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்த அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதுடன், நாட்டின் அமைதி, சௌபாக்கியத்திற்காக நாயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் மற்றும் நாகவிகாரை ஆகியவற்றில் விசேட பூஜை வழிபாடுகளும் அமைச்சர்களின் பங்கேற்றலுடன் நடைபெறவுள்ளன.

உடுவில் பிரதேச செயலகக் கட்டடம், குடத்தனை 'சேவா பியச' கட்டடம், கற்கோவளம் பிரதேச செயலாளருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் யாழ் மாவட்ட விடுமுறை விடுதிக் கட்டடம் ஆகியன இம்மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் திறந்து வைக்கப்படவுள்ளன.

அமைச்சர் ஜோன் செனவிரத்ன தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று இம் மாதம் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் வடக்கிற்கான விசேட விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது. இக் குழுவினர் மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொள்வதுடன், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், கிராமசேவகர்களுக்கான மாநாட்டிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

19ஆம் திகதி நாட்டிற்கு அமைதி, சௌபாக்கியம் வேண்டி நாகபூஷணி அம்மன் கோவில், நாகவிகாரை ஆகிய வழிபாட்டுத் தலங்களில் விசேட பூஜைகள் நடைபெறவுள்ளன.

20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் விடுமுறை விடுதிக்கட்டடம் அமைச்சர் ஜோன் செனவிரத்னவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் உடுவில் பிரதேச செயலகத்திற்கான கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுவதுடன், 21ஆம் திகதி காலை புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ் மாவட்டத்தின் முதலாவது 'சேவா பியச' கட்டடம் குடத்தனையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்களுக்கான விசேட மாநாடும், பிற்பகல் பருத்தித்துறை கற்கோவளம் பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் திறந்து வைக்கப்படவுள்ளன.


இந்நிகழ்வுகளில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் விஜய தஹநாயக்க, வட மாகாண ஆளுநர் ஜீ. ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அபேகோன் உட்பட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### மாதகலில்...

நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 10.30 மணியளவில் குறித்த பணியாளர் மிதிவெடியகற்றிக் கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. இதில் 23 வயதுடைய எஸ். நிஷாந்தன் என்ற பணியாளரே படுகாயமடைந்தவராவார். இவர் சிகிச்சைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா வைத்தியாசலைக்கு நேற்று மாலையில் மாற்றப்பட்டுள்ளார்.

# வழங்க முடியாது சம்பள உயர்வு; ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவிப்பு



(கொழும்பு)


பல்கலைக்கழக ஆசிரியர்கள் கோரும் 200 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட முடியாது எனவும் இக்கோரிக்கை அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் நோக்கமுடையது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேவேளை, பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது கோரிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்தால் அதற்கு ஏற்பாடு செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசியர்களுக்கு 200 சதவீத சம்பள உயர்வு வழங்கினால் ஏனைய கல்வித்துறை அதிகாரிகளும் இவ்வாறான சம்பள உயர்வு கோருவர். அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாத கோரிக்கையை முன்வைப்பது நியாயமானதல்ல எனவும் ஜனாதிபதி நேற்று தெரிவித்துள்ளார்.

# யாழ்.நகரில் அங்காடி வியாபாரம்; புதிய நடை முறைகள் அமுல்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - முனீஸ்வரா வீதிப் பகுதியில் அங்காடி வியாபாரம் செய்யும் வியாபாரிகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அமைச்சரின் யாழ்.செயலகத்தில் நேற்றைய தினம் இடம் பெற்ற இச்சந்திப்பின் போது யாழ்.நகருக்கென தீர்வுகாணும் முகமாக பல புதிய நடைமுறைகளை யாழ்.மாநகர சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனால், தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக வியாபாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதனை ஆராய்ந்த அமைச்சர் அவர்கள் தற்போது வியாபாரம் நடைபெறும் முனீஸ்வரா வீதியின் இருபக்கங்களிலும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும், ஒருபக்கத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதுடன், யாழ்.மாநகர சபையின் சட்டதிட்டங்களுக்கு உட்படாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், வீதிக்கு குறுக்காக தறப்பாள் கட்டும் போது உயரமாகக் கட்டித் தற்காலிக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும், இது ஒரு தற்காலிக நடவடிக்கையே என்றும் தெரிவித்தார்.

அத்துடன், வியாபாரிகள் சுத்தம் சுகாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தும் அதேவேளை, மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நேற்றைய கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் உடனிருந்தனர்.

# சர்வதேச சமூகத்துடன் இணங்கிப்போக வேண்டும்

## இலங்கைக்கு பிரான்ஸ் ஆலோசனை

இலங்கை சர்வதேச சமூகத்துடன் இணங்கிச் செயற்பட வேண்டுமென பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. தேசிய நல்லிணக்கத்திற்கான பிரதான ஏதுக்களில் ஒன்றாக குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படும் நிலைமை கருதப்படுவதாக பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சமூகத்துடன் ஆக்கபூர்வமான தொடர்புகளை அரசாங்கம் பேண வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. நிபுணர் குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். உதயபுரத்தில்...

சாலையொன்றை நிறுவுவதற்கு உடனடியாக நடவடிக்கை கள் முன்னெடுக்கப் படுமெனவும் ஏனைய கோரிக்கைகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுமெனவும் தெரிவித்த அமைச்சர் அவர்கள், அங்கு மக்கள் பயன்பெறக் கூடிய வகையில் 500 தென்னங்கன்றுகளைப் பெற்றுத் தருவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தவிர சவுக்குமரங்களைப் பெற்றுத் தருவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படுமெனவும் தெரிவித்தார். இறுதி யில் மக்களுடனும் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்), நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டார்.

# மட்டக்களப்பில் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

மட்டக்களப்புக்கு நேற்று பகல், செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த அமெரிக்க உயர்ஸ்தானிகர் பற்றீசியா ஏ புற்ரெனிஸ் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தினரைச் சந்தித்து வர்த்தக மேம்பாடு, உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில், அமெரிக்க தூதரகத்தின் மனித உரிமைகளுக்கான அதிகாரி, ரோய் சிறினியும் கலந்து கொண்டார்.

சம்மேளனத்தின் சார்பில், தலைவர் ரஞ்சிதமூர்த்தி, செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வர்த்தகத் துறையினருக்குள்ள தேவைகள் எவ்வாறு களையப்படலாம், அவர்களுடைய குறைபாடுகள், பணம் சார்ந்த உதவிகள் குறித்து அமெரிக்க உயர்ஸ்தானிகர், மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாயச் சம்மேளனத்தினரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், விதவைகளுக்கான தேவைகள் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் யுத்தம் நிறைவு பெற்றபின்னர் மிகவும் தேவையாகவுள்ளன. அந்த வகையில் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை [illegible] விரைவில் முன்வைக்கவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


01. சிங்களமொழி மூல மாணவர்களின் எண்ணிக்கை யாது?

02. தமிழ்மொழி மூல மாணவர்களுக்கும், சிங்களமொழி மூல மாணவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

03. தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றும் பெண் மாணவிகள் எத்தனை பேர்?

04. ஒரு வகுப்பறையில் 20 மாணவர்கள் மாத்திரமே பரீட்சை எழுத முடியும் எனில், புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கும் எத்தனை வகுப்பறை தேவைப்படும்?


05. சிங்களமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவிகளைக் காட்டுகின்ற நிரல் வரைபை நிழற்றுக.





44. பின்வரும் உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னமாகவும் தசம எண்ணாகவும் எழுதுக.

1. பின்னம் :

2. தசமம் :



45.  எதிரே காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை நாற்பக்கலை இனம் காண முடியும்?


46. 8 மீற்றர் நீளமும், 5 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 2 லீற்றர் தீந்தை தேவை எனில், 5 மீற்றர் நீளமும், 2 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு தீந்தை தேவை?

47. நிஸாம், அவனது தாய் ஆகியோரின் நிறை 64 kg ஆகும். நிஸாமின் தாயின் நிறை, நிஸாமின் நிறையின் மூன்று மடங்கு ஆயின், நிஸாமின் நிறை எவ்வளவு?

48. இரவு 11.50 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைய வேண்டிய விமானமொன்று 15 நிமிட தாமதத்தின் பின், விமான நிலையத்தை வந்தடைந்தது எனின், விமானம் வந்தடைந்த நேரத்தை 24 மணிநேர கடிகார முறையில் தருக.

49. ஒரு நீளமான வாங்கிலில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் மகிந்த, முன்னாலிருந்து கணக்கிடும்போது 5 ஆவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும்போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கிலில் அமர்ந்துள்ள மாணவர் எண்ணிக்கை யாது?

50. அருகில் தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவு 2 எனில், உருவின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?



**ஒருநாள் மாலை வேளையில் திடீரென புயற்காற்று, இடிமின்னல் ஆகியவற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது........**
(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு, சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக அமைய வேண்டும்)

**எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 13



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பின்வரும் பாடலைக் கவனமாக வாசிக்கவும்.**

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு. நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பின் குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாக உறங்கப்பா!

**இப்பாடலைப் பயன்படுத்தி 1-6 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

01. "எங்கே சுகம் உண்டு" எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்?

02. இங்கு இடம்பெறும் வரிசை மொழி எது?

03. "சுகம்" என்பதன் ஒத்தசொல்லை எழுதுக.

04. "ஏழை" என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

05. கூழைக் குடிக்க முன்பு என்ன செய்ய வேண்டும்?

06. இப்பாடலுடன் தொடர்புடைய பழமொழியொன்றை எழுதுக.

**7ஆம், 8ஆம் வினாக்களிலுள்ள ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

07. ஒற்றைக் காலில் நிற்றல்

08. உச்சி குளிர்தல்

09. "அடர்ந்த சோலையொன்றில் பூக்கள் பூத்திருந்தன" இதனை ஒருமை வாக்கியமாக எழுதுக.

10. பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.

குகன் உன்னுடைய பயிற்சிக் கொப்பியைக் கொண்டு வா

**பின்வரும் பந்தியை வாசித்து 11-14 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

மட்டக்களப்பு நகரின் திருமலை வீதியிலுள்ள 115 ஆம் இல. வீட்டிலே 1998 ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி பிறந்த டேவிற், மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல பாடசாலையான புனித மிக்கேல் கல்லூரியில் தரம்-5 வகுப்பில் கல்வி கற்கின்றான். இவனது அப்பாவான ஜேம்ஸ் அதே பாடசாலையில் கற்பிக்கிறார்.

**பின்வரும் அட்டைப் பத்திரத்தை நிரப்புக.**

11. முழுப்பெயர்

12. கற்கும் தரமும், வகுப்பும்

13. பிறந்த திகதி

14. 01.05.2008 ஆம் திகதியன்று வயது

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

15. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
What is this?

16. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
என்னை மன்னியுங்கள்

17. "ஓயாகே நம மொக்க(த்)த என்பதன் கருத்தைத் தமிழில் எழுதுக.

.................................................................................................................................

18. "பாடம் படியுங்கள்" என்று சிங்களத்தில் கூறப்படுவதைத் தமிழில் எழுதுக.

.................................................................................................................................

**19-35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

19. பின்வரும் இலை வகைகளிடையே எண்ணெய் பெற உதவும் இலை வகை எது?
1. மிளகு இலை 2. கறுவா இலை 3. ரோஜா இலை 4. ராபு இலை

20. இயற்கையில் தாமாகவே தாவர வேரிலிருந்து கன்று / நாற்றுக்கள் முளைக்கும் தாவரம் எது?
1. பலா 2. லொவி 3. கறிவேப்பிலை 4. வத்தாளை

21. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டி, சைக்கிள் ரியூப் போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது அவற்றின் தரத்தை எவ்வாறு அறியலாம்.
1. உற்பத்தியாளரின் பதிவு இலக்கம் 2. ISO சான்றிதழ்
3. SLA சான்றிதழ் 4. ISBN சான்றிதழ்

22. பௌத்த மதத்தினர் புனித மரமாகக் கருதி வழிபடும் வெள்ளரசுமரம் காணப்படும் புராதன நகரம் எது?
1. தம்புள்ள 2. கம்பளை 3. மிகுந்தலை 4. கண்டி


23. உணவு உண்ணும் வேளை கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கம் எது?
1. தேசிய உணவான அரிசிச் சோற்றை உண்ணுதல் 2. உடன் உணவு வகைகளை உண்ணுதல்
3. வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல் 4. உணவை மெல்லாது விரைவாக விழுங்குதல்

24. இடி மின்னலுடன் மழைபெய்யும்போது, பாதுகாப்புக்காகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை எது?
1. ஆறு,குளம்,நீச்சல் தடாகம் போன்றவற்றில் நீந்துதல் 2. விளையாட்டு மைதானத்தில் விளையாடுதல்
3. வீட்டினுள்ளே இருத்தல் 4. மின்சாதனங்களின் பாவனையைத் தவிர்த்தல்

25. மஞ்சள் நிறமுடைய பழங்கள், காய்கறிகள் போன்றவற்றைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் தவிர்க்கக்கூடிய குறைபாட்டு நோய் எது?
1. கண்டமாலை 2. மாலைக்கண் 3. குருதிச்சோகை 4. ஸ்கேவிநோய்

26. மின்காந்தம் பயன்படுத்தப்படும் மின்சாதனம் பின்வருவனவற்றுள் எது?
1. மின்மணி 2. மின்குமிழ் 3. பாரம்தூக்கி 4. மின்னடுப்பு

27. இரவு வானில் தோன்றும் உடுத்தொகுதிகளில் சிம்ம உடுத்தொகுதி எது?



28. இலங்கையில் பிரசித்திபெற்ற விளையாட்டுக்களில் ஒன்றின் வரிப்படம் அருகில் தரப்பட்டுள்ளது. இந்த விளையாட்டில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 7 3. 11 4. 16



29. இலங்கையில் குடியரசு ஆட்சி மலர்ந்த ஆண்டு எது?
1. 1948 2. 1956 3. 1972 4. 1978

30. மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?
1. முன்னால் பாதசாரிகள் கடவை
2. முன்னால் பாடசாலை
3. முன்னால் சிறுவர் கடவை
4. முன்னால் வாகன சாரதிகள் கடவை








31. நீண்ட நாட்கள் வாடாத, வாசனையற்ற பூ பின்வருவனவற்றுள் எது?
1. கொடிமல்லிகை 2. கடதாசிப்பூ 3. செவ்வந்திப்பூ 4. கொன்றைப்பூ

32. பண்டைய மன்னர்கள் போரில் வெற்றியீட்டியதைத் தெரிவிக்க இசைக்கும் வாத்தியக் கருவி எது?



33. பொதி செய்யப்பட்ட உணவு வகை, மருந்து வகை அடங்கிய பொதியினுள்ளே, வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்காக இடப்பட்டிருக்கும் சிறுபைக்கட்டினுள் காணப்படும் பதார்த்தம் எது?
1. சிலிக்கா ஜெல் 2. சுண்ணாம்பு 3. நீராவி உறிஞ்சி 4. இரும்புத்தூள்

34. பதிவுத் தபால் ஒன்றை உள்நாட்டில் அனுப்புவதற்கு ஒட்டவேண்டிய முத்திரைகளின் பெறுமதி யாது?
1. 16.50 2. 20.00 3. 26.00 4. 30.00

35. மனிதருக்கும், பயிருக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படும் தாவரம் எது?
1. வேம்பு 2. ஆமணக்கு 3. மதுரை 4. கீழ்காய் நெல்லி

**பொதுமக்கள் பின்வரும் சேவைகளைப் பெறச் செல்ல வேண்டிய இடம் எவை. புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

36. கடவுச்சீட்டைப் பெறுதல் ..........................................

37. பிறப்புச் சான்றிதழ் பிரதி எடுத்தல் ..........................................

**அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிவுசெய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| சீவுளி | பொலிகாளை | Hallo | காளை | மட்டப்பலகை | வளியூட்டி | Thanks | துருத்தி |

38. உலகிலுள்ள மனிதர்களில் அனேகர் பயன்படுத்தும் ஆங்கில வார்த்தை.................................................... ஆகும்.


39. சூடு மிதிக்கும் இடத்தில் எருதுகளை....................................................என அழைப்பர்.

40. அடுப்பு எரிவதற்குக் காற்றை வழங்கும் கருவி....................................................ஆகும்.

41. மரப்பலகையை அழுத்தமாகப் பயன்படுத்தப்படும் கருவி....................................................ஆகும்.

42. பின்வரும் அடைப்புக்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான பெயரைத் தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| சாத்தாவாரி, இஞ்சி, மிளகு, கறிவேப்பிலை, எலுமிச்சை, வேம்பு, கோரை, ஆவரசு |



1.................................. 2.................................. 3.................................. 4..................................

43. புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுதவற்காக ஒரு பரீட்சை நிலையத்திற்கு வருகைதந்த மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| பாடசாலை | சிங்கள மொழி மூல மாணவர்கள் | | தமிழ் மொழிமூல மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1) மகிந்த வித்தியாலயம் | | 43 | 61 | – – |
| 2) சேனநாயக்க வித்தியாலயம் | 28 | 24 | 18 | 32 |
| 3) அந்தோனியர் பாடசாலை | 49 | 46 | 29 | 28 |
| 4) மகாமாய கல்லூரி | – | 72 | – | – |
| 5) மகாஜனக் கல்லூரி | – | – | 63 | 62 |